# கதிர்காம யாத்திரை

கி. வா. ஜகந்நாதன்



அமுத நிலையம்

# கதிர்காம யாத்திரை

★

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை - 18


முதற் பதிப்பு—செப்டம்பர், 1953
அமுதம்—69
உரிமை பதிவு

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | திசைமாறா | ... 1 |
| 2. | சாலை வழியே | ... 6 |
| 3. | மாணிக்க கங்கை | ... 10 |
| 4. | சந்நிதி | ... 15 |
| 5. | திருக்கோயில் | ... 22 |
| 6. | தரிசனம் | ... 28 |
| 7. | திருவிழாக் காட்சிகள் | ... 33 |
| 8. | கல்யாண மடம் | ... 40 |
| 9. | பிற செய்திகள் | ... 46 |
| 10. | முடிவுரை | ... 51 |
| 11. | கதிர்காமத் திருப்புகழ்ப் பாடல்கள் | ... 54 |
| 12. | கதிர்காம இளமுருகன் | ... 69 |
| 13. | மணிச் செஞ்சோதி | ... 72 |
| 14. | கதிர்காம வேலவன் | ... 75 |


விலை ரூ. 1 0 0

நாஷனல் ஆர்ட் பிரஸ்
தேனாம்பேட்டை, சென்னை–18



**கோயிலின் திருமதில் வாயில்**

போட்டோ : அ. ஞானசம்பந்தம்




முருகன் கோயில் முகப்பு

போட்டோ : அ. ஞானசம்பந்தம்



**திருமால் கோயிலும் முருகன் கோயிலும்**

போட்டோ : அ. ஞானசம்பந்தம்



ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன்

# முன்னுரை

இலங்கைக்கு நான் 1951-ஆம் ஆண்டு முதல் முறையாகப் போனபோது பல இடங்களைப் பார்த்தேன். என்னுடைய அன்பர் ஸ்ரீ கே. கணேஷ் தம்முடைய காரை என்னுடைய பிரயாணத்துக்காகவே அளித்துத் தாமும் எனக்குத் துணையாக வந்தார். அவருடைய உதவி இல்லாமல் இருந்தால் 'நான் இலங்கை போனேன்; வந்தேன்' என்ற அளவில்தான் என் பிரயாணம் இருந்திருக்கும். மலைமேலும் பள்ளத்தாக்கிலும் சமவெளியிலும் கடற்கரையிலும் நூற்றுக்கணக்கான மைல்களைக் கடப்பதற்கு அவருடைய காரும் அன்பும் மிகமிகத் துணையாக இருந்தன.

இலங்கையிலே நான் பல இடங்களுக்குச் சென்றேன். பல காட்சிகளைக் கண்டேன். சில இடங்களில் என் கண்கள் இயற்கையழகை மொண்டு உண்டன. சில இடங்களில் என் நா இனிய விருந்தை நுகர்ந்தது. சில இடங்களில் என் செவிகள் பாராட்டுரைகளைக் கேட்டு இன்புற்றன. சில இடங்களில் நறுமண மலர்களை என் நாசி அநுபவித்தது. சில இடங்களில் அருவியையும் தென்றலையும் என் உடம்பு உணர்ந்து மகிழ்ந்தது. ஆனால் கதிர்காமத்திலோ என் உள்ளம் உணர்ச்சிமயமாயிற்று. செயலிழந்து நின்றேன். கூட்டத்திற் சென்று தலங்களை வழிபடுவதில் பல தொல்லைகள் உண்டென்று கருதுகிறவன் நான். என் விருப்பத்திற்கு ஏற்றபடி கதிர்காமத்துக்கு நான் சென்றபோது ஒரு விழாவும் நடைபெறவில்லை; கூட்டமே இல்லை. கண்ணுற் கண்டுகளிக்கும் ஆரவாரக் காட்சிகள் இல்லை. காதாற் கேட்டுவக்கும் முழக்கங்கள் இல்லை. ஆனாலும் கதிர்காமத்தலம் இருக்கத்தான் இருந்தது; மாணிக்க கங்கை ஓடிக்கொண்டுதான் இருந்தது; கதிர்காம வேலன் என்றும் உள்ளது போலவே இன்னவகை எனவரிய இரகசியப் பொருளாகவே இருந்தான்.

அமைதியான சூழ்நிலையில் மன அமைதியுடன் கதிர்காமத்தைத் தரிசிக்கும் இன்பம் கிடைத்தது. அத்தலத்தைப்பற்றிப் பலபல கதைகள் தமிழ் நாட்டில் வழங்குகின்றன. அவற்றையெல்லாம் கேட்டபோது எனக்கு இருந்த உணர்ச்சியைவிட, கதிர்காமம் போய், நான் கேட்ட அத்தனையும் வெறும் கட்டுக் கதைகள் என்று உணர்ந்த சமயத்தில் உண்டான உணர்ச்சி அதிகம்.

அற்புதங்கள் நடக்கும் இடங்களை நாடிக் கூட்டம் கூட்டமாகப் போவது மனிதர்களுக்கு இயல்பாகி விட்டது. இந்த இயல்பை உணர்ந்த பலர் வேண்டுமென்றே சில இடங்களில் பெரிய அற்புதங்

கள் நடப்பதாகக் கதை கட்டி விடுகிறார்கள். உண்மையில் இறைவனிடத்தில் பக்தி உண்டாக அற்புதங்களே வேண்டுவதில்லை. அற்புதமென்று நான் இங்கே குறிப்பிடுபவை, மனித சக்திக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளை. இறைவன் இந்த உடம்பைப் படைத்திருக்கிறானே, இதைவிட அற்புதம் வேறு ஏதாவது உண்டா? இந்த உடம்பில் கண்ணை வைத்திருக்கிறானே, இது மாதிரி அற்புதத்தை மனிதன் செய்ய முடியுமா? உடம்புக்குள் இருதயம் ஒன்றை வைத்துத் துடிக்கச் செய்கிறானே அந்த மகா அதிசயமான அற்புதம் ஒன்றுக்கே இறைவனுக்கு நூறு புராணங்கள் பாடலாமே. இருதயத்துக்குள் உணர்ச்சியை எழுப்பி மூளைக்குள் அறிவை மலர்த்தி மனிதனைத் தன் அருளுக்குப் பாத்திரனாகும்படியாக அமைத்திருக்கும் அற்புதத்தைச் சிந்தித்துப் பார்த்தால் உள்ளம் உருகாதோ?

ஆகவே கதிர்காமத்தில் தனியே செப்பிடு வித்தைகளைப் போன்ற அற்புதங்களைக் கண்டுதான் பக்தி கொள்ள வேண்டும் என்பதில்லை. இலங்கையில் எங்கேயோ ஒரு மூலையில் காட்டில் இத்தனை மக்களைக் கூட்டம் கூட்டமாக முருகன் வரும்படி செய்கிறானே, அதுவே அற்புதம். பல சமயத்தவர்களும் ஒரே இடத்தில் வந்து பணியும்படி செய்வது அற்புதம். இத்தனை காலமாகியும் மகிமை குன்றாமல் இருப்பது அற்புதம்.

இந்த அற்புதங்களைச் சிந்தித்துப் பார்த்தால், உணர்ச்சியுடன் சிந்தித்துப் பார்த்தால், பக்தி உண்டாக வகை உண்டு. பக்தர்களுக்கு உள்ளம் உருகி இன்புற வழி உண்டு.

என்னுடைய அநுபவங்களை எழுத வேண்டுமென்று அன்பர்கள் விரும்பியமையால் இதனை எழுதலானேன். இது "அமிர்த வசனி" என்ற மாதப் பத்திரிகையில் வெளியாயிற்று. அதன் ஆசிரியர் ஸ்ரீ சு. முத்துசாமி ஐயரவர்கள் என்பால் அளவற்ற அன்புடையவர். இந்த யாத்திரைக் கட்டுரைகள் வெளிவரும்போது என்னை மேலும் மேலும் தூண்டி ஊக்கமளித்த அவர்கள் அன்பை மிக்க நன்றியறிவுடன் பாராட்டுகிறேன்.

அருணகிரிநாதப் பெருமான் கதிர்காமத்தைப் பற்றிப் பாடிய திருப்புகழ்ப் பாடல்களை இப்புத்தகத்தின் இறுதியிற் சேர்த்திருக்கிறேன். அதன் பின் நான் பாடிய சில பாடல்களும் இருக்கின்றன.

இது கதிர்காமத்தின் புராணம் அன்று. கதிர்காமத்துக்குச் செல்ல விரும்புபவர்களுக்கு வழி காட்டும் துணை நூலும் அன்று. கதிர்காமத்துக்குச் சென்ற போதும் அத்தலத்தைத் தரிசித்த போதும் அப்பாலும் என் உள்ளத்தில் விளைந்த எண்ணங்களும் சித்திரங்களும் அமைந்த கட்டுரை இது. அந்த அளவிலே இதற்கு ஏதேனும் பயன் உண்டானால் முருகன் திருவருள் என்று எண்ணி மகிழ்வேன்.

மயிலாப்பூர்
25—6—53

கி. வா. ஜகந்நாதன்

# கதிர்காம யாத்திரை

## 1

### திசை மாரா

"இலங்கைக்கு வந்து கண்டியில் தமிழ் விழாவுக்குத் தலைமை வகிக்க வேண்டும்" என்ற கடிதம் கண்டியிலிருந்து எனக்கு வந்தது. கணேஷ் என்ற பழைய அன்பர் அதை எழுதியிருந்தார். முன்பு தமிழ் விழா மிகவும் விமரிசையாக யாழ்ப்பாணத்தில் நடந்தபோது பல அன்பர்கள் அங்கே சென்று அப்படியே இலங்கையில் உள்ள பல இடங்களைப் பார்த்துவிட்டு வந்தார்கள். அந்த விழாவுக்கு நான் போக வில்லை. ஆனாலும் முருகன் திருவருளால் எப்போதாவது நமக்குத் தனியே அழைப்பு வரும் என்று எண்ணி யிருந்தேன். என் எண்ணம் விரைவில் கை கூடியது.

கண்டியில் நடைபெறும் ஒரு சிறிய தமிழ் விழாவுக் குத் தலைமை வகிப்பதற்காகப் போக நேர்ந்தது. அன்பரிட மிருந்து அழைப்பு வந்தவுடனே, "கதிர்காமத்துக்குப் போக வேண்டும்" என்ற என் விருப்பத்தை எழுதினேன். அவர், "நானும் போகவேண்டுமென்று எண்ணியிருந்தேன். நீங்களும் வருவதாக இருந்தால் என் நெடு நாள் ஆவலைத் தீர்த்துக் கொள்வேன்" என்று எழுதினார். அவருடைய அன்பையும் மரியாதையையும் என்னவென்று சொல்வது! 'கதிர்காமத்தை எனக்குக் காட்ட அவர் வரவில்லையாம்; தாம் தரிசிக்க என்னைத் துணையாகக் கொள்கிறாராம்!' என்று அவர் உள்ளப் பெருமையை நினைந்து பாராட்டினேன்.

இலங்கை சென்றேன். கண்டியில் விழாக்கள் நடை பெற்றன. வேறு இடங்களுக்கும் சென்று பார்த்தேன். என் நினைவு கதிர் காமத்திலே இருந்தது. அன்பர் கணேஷ், "நான் இந்தக் காரை இப்போதுதான் வாங்கி யிருக்கிறேன். இதில் முதல் முதலாகக் கதிர் காமத்துக்குப் போகும் பாக்கியம் கிட்டியிருக்கிறது. அதுவும்........" என்று மேலே என்னைப் பற்றிப் புகழ்ந்தார், அவர் தலாது ஓயா என்ற கிராமத்தில் இருப்பவர். அங்கிருந்து கதிர் காமம் இருநூறு மைல் இருக்குமென்று நினைக் கிறேன்.

நாங்கள் 1951-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி வியாழக்கிழமை யன்று புறப்பட்டோம். எங்களுடன் ஒரு சிங்களவரும் கதிர் காம வேலனைத் தரிசிக்க வேண்டு மென்று வந்தார். அவர் கதிர் காமத்துக்கு வருவதாகச் சொல்ல வில்லை; '**கத்தரகம தெய்யோவை**'த் தரிசிக்க வேண்டும் என்றார். பௌத்தர்களாகிய சிங்களவர் கதிர் காம வேலனை அப்படித்தான் சொல்கிறார்கள். எங்களுடைய காரின் சாரதியும் ஒரு சிங்கள இளைஞன்,

அன்று கார்த்திகை; முருகனுக்கு உரிய நட்சத்திரம். அன்று புறப்பட்டு இடையிலே சில இடங்களைப் பார்த்துக் கொண்டு மறுநாள் வெள்ளிக்கிழமை யன்று கதிர் காம வேலன் திருக் கோயிலுக்குச் செல்வது என்று திட்டம் போட்டுப் புறப்பட்டோம். மலைப் பகுதிகளிலே கார் ஏறி இறங்கிச் சென்றது. அன்று நுவரா எலியா, பண்டாரவளை, வதுளை என்ற இடங்களைப் பார்த்துவிட்டு, இரவு **முனராகந்த** என்ற தேயிலைத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தோம். அன்றிரவு அங்கே தங்கினோம்.

"முனரா கந்த என்றால் என்ன பொருள்?" என்று கேட்டேன் அந்தத் தோட்டத்துத் தலைவரை. "மயில் குன்றம் என்று பொருள். இந்தப் பக்கங்களில் மயில்கள் அதிகம்" என்று சொன்னார் அவர். அதுவரையில் அந்த இடத்தின்

பேரழகிலே ஈடுபட்டு அங்குள்ள தண்மையிலே ஊறி நின்றேன். உடம்பும் கண்ணும் களித்தன. ஆனால் அவர் தம்முடைய தோட்டத்தின் பெயருக்குப் பொருள் விளக்கிய போது எனக்குத் தனியே ஓர் இன்பம் உண்டாயிற்று.

நாங்கள் கதிர் காம யாத்திரையை அன்று ஆரம்பித்தோம். கதிர் காம வேலவன் ஞாபகம் மனத்தில் இருந்தது. அந்த நாளும் முருகனுக்குரிய கிருத்திகை. இப்போது நாங்கள் தங்கிய இடமும் முருகனை நினைப்பூட்டும் இடமாக அல்லவோ இருக்கிறது? மயில் வாகனப் பெருமானை நினைப்பூட்டியது அந்த மயிற்குன்றம். 'மொனராகந்த' என்ற சிங்களப் பெயரைக் கேட்டபோது அந்த உணர்ச்சி இல்லை; அதன் பொருளைக் கேட்டபோதுதான் 'செஞ்சிறிய கால் விசாலத் தோகை துங்க அநுகூல பார்வைத் தீரச் செம்பொன் மயில்' ஞாபகம் வேரூன்றியது. மயில் வாகனப்பெருமான் தலத்தைத் தரிசிப்பதற்கு முன்பு மயில் வாகனத்துக்குரிய இடத்தைத் தரிசிப்பது எவ்வளவு பொருத்தமான காரியம்!

காலையில் எழுந்தோம். மயிற்குன்றத்தை விட்டுப் புறப்பட்டோம். சில மணி நேரம் மலைப்பகுதிகளைத் தாண்டிச் சென்று சமவெளியில் கார் செல்லத் தொடங்கியது. ஆனால் எங்கும் அடர்ந்த காடு. அந்தக் காட்டினூடே மிக அழகான சாலை. அதன் வழியே நாங்கள் சென்றோம். திசைமாறா என்ற இடத்துக்கு வந்தபோது, "கதிர் காமத்தை அணுகிவிட்டோம்" என்று அன்பர் சொன்னார்; "இன்னும் பதினொரு மைல் தூரம் இருக்கிறது" என்று அவர் பின்னும் விளக்கினார். கிட்டத்தட்ட இருநூறு மைல் வந்த எங்களுக்குப் பதினொரு மைல் கூப்பிடு தூரந்தானே?

தமிழ் நாட்டில் கதிர்காமத்தைப் பற்றி எத்தனையோ விதமான செய்திகளைக் கேட்கிறோம். "மலையின் மேலும் காட்டினூடும் இருநூறு மைலுக்கு மேலே பிரயாணம் செய்யவேண்டும். அத்தனை தூரமும் நடந்தே போக

வேண்டும். வழியில் காட்டு மிருகங்கள் வரும். கதிர் காமவேலனிடம் பக்தியில்லாதவர்கள் அந்த விலங்கு களுக்கு இரையாக வேண்டும். முக்கியமாக யானைக் கூட்டம் இந்த வழியில் மிகுதி. உண்மையான பக்தி யோடு அரோஹரா என்று சொன்னால் யானைகள் வழி விடும். வழியில் உள்ள சிங்களவ வேடர்களும் பொல்லா தவர்கள். காசு பணம் கண்டால் கொலைக்கும் அஞ்சாத வர்கள்" என்று கதை பேசுகிறார்கள். ஏதோ ஒரு காலத்தில் கதிர்காமத்துக்குப் போவது கஷ்டமாக இருந்திருக்க லாம். போக்கு வரத்து வசதிகள் இல்லாத காலம் அது. நம்முடைய நாட்டில்கூடப் பழனிக்குப் போவது அந்தக் காலத்தில் கஷ்டந்தான். பழங் காலக் கதையை இன்னும் அப்படியே சொல்லிக் கொண்டிருப்பதுதான் வேடிக்கை.

கதிர் காமத்துக்குக் கொழும்பிலிருந்துதான் யாத்திரி கர்கள் பெரும்பாலும் வருகிறார்கள். கொழும்பிலிருந்து சற்றேறக் குறைய 170 மைல் தூரத்தில் கதிர்காமம் இருக்கிறது. அழகான ரோடு வசதி உண்டு. இடை யிடையே பல ஊர்கள் இருக்கின்றன. எந்த வழியாக வந்தாலும் திசை மாராவுக்கு வந்து அங்கிருந்துதான் போக வேண்டும். திசை மாரா வரையில் நல்ல தார் ரோடு; அப்பால் சற்றுச் சுமாரான ரோடு இருக்கிறது.

திருவிழாக் காலங்களில் லட்சக் கணக்கான ஜனங்கள் வருவார்களாம். அந்தக் காலங்களில் திசை மாராவோடே கார்களெல்லாம் நின்றுவிடும். அதற்கு அப்பால் நடந்தே செல்வார்கள் பக்தர்கள். அரோஹரா அரோஹரா என்று சப்தம் போட்டுக்கொண்டே போவார்கள். யாராவது கதிர் காமம் போகும் சாலையில் போனால் சாலைக்கருகில் வாழும் ஜனங்கள், "அரோஹரா!" என்று சொல்கிறார்கள். திசை மாராவில் இந்த 'அரோஹரா!' ஒலி ஆரம்பமாகிறது.

திசை மாரா என்ற சிங்களப் பெயரைப் பற்றி ஆராய்ந்தேன். பக்கத்தில் இருந்தவர்களைக் கேட்டேன்.

திஸ்ஸ மஹாராமம் என்பதே அப்படி மாறி வழங்கியதா கத் தெரிந்தது. ஆராமம் என்று பௌத்தர்கள் தங்கள் கோயிலை வழங்குகிறார்கள். திசை மாராவில் மிகப் பெரிய பௌத்தக் கோயில் ஒன்று இருக்கிறது. அது திஸ்ஸன் என்ற அரசனால் கட்டப்பட்டது. அதனால் அந்தக் கோவி லுக்குத் திஸ்ஸ மகா ஆராமம் என்ற பெயர் ஏற்பட்டது.

பௌத்தர் கோயில்களை டகோபா என்று இப்போது யாவரும் சொல்கிறார்கள். வட்டவடிவமான மேடை. அதன் மேலே ஒரு நீண்ட ஸ்தூபி. குங்குமச்சிமிழ் மூடி யின் கொண்டையை நீட்டிவிட்டால் எப்படி இருக்குமோ அத்தகைய உருவம் உடையது டகோபா. இலங்கை முழு வதும் சிறியதும் பெரியதுமாகப் பல டகோபாக்களைக் காணலாம். திசைமாராவில் உள்ள டகோபா மிகப்பெரியது.

பௌத்த பிக்ஷுக்களின் அங்கங்களில் பல், மயிர், நகம் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றை வைத்து மேலே இந்தக் கோயிலைக் கட்டுவார்களாம். புத்தருடைய பல் உள்ள கோயில் ஒன்று கண்டியில் இருக்கிறது. அதைத் தலத மாளிகை என்று சொல்கிறார்கள். இந்தக் கோயில் கள் எல்லாவற்றையும் தாது கோபம் என்று நூல்கள் கூறும். தாது கோபம் என்பதே டகோபாவாகச் சிதைந்து வழங்குகிறது போலும்.

திஸ்ஸ மன்னன் கட்டிய மகாராமத்தின் உன்னத மான தோற்றம் கதிர் காம வேலனைக் காணச் செல்வோ ருக்கு வழி காட்டும் அடையாளம் போல இருக்கிறது. கதிர் காம வேலனின் ஆலயச் சூழல் அங்கிருந்தே தொடங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும். அரோஹரா சப்தமும் பக்தர்கள் காலால் நடப்பதும் அங்கேதான் ஆரம்பமாகின்றன.

திசைமாரா சிறிய ஊர். அங்கே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதன் கரையில் யாத்திரிகர் விடுதி (Guest House) ஒன்றை அரசாங்கத்தார் நடத்தி வரு

கிருர்கள். காட்சி யின்பத்துக்காக வரும் கனவான்கள் அங்கே உணவு கொண்டு தங்குகிருர்கள். கதிர் காமத் துக்குச் செல்லும் திசை மாருமல் அடையாளமாக நிற்கும் திசை மாராவில் சில நிமிஷங்கள் தங்கிக் கதிர் காமத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

## 2
## சாலை வழியே

கதிர்காமத்தை நோக்கிச் செல்லும் பாதையில் எங்கள் கார் போய்க்கொண் டிருந்தது. கதிர்காம வேலனைப் பற்றியே உடன் வந்த அன்பர்கள் பேசினுர்கள். விழாக் காலத்தில் கார்களைத் திசைமாராவிலே நிறுத்தி விட்டுப் பக்தர்கள் அங்கிருந்து கால் நடையாகக் கதிர் காமத்தை நோக்கிப் புறப்படுவார்கள்.

முன்பெல்லாம் அந்தச் சாலை திருத்தமாக இருக்க வில்லை. இப்போது நன்ருக இருக்கிறது. லட்சக் கணக் கான அடியார்களின் பக்தி ஆவேசத்தைக் கண்டது அந்தச் சாலை. ஆயிரக் கணக்கான மக்கள் கூட்டம் கூட்ட மாக அரோஹரா என்ற முழக்கத்துடன் அந்தச் சாலையில் செல்வார்களாம். அவ்வளவு மக்களும் கதிர்காமக் கடவுளையன்றி வேறு ஒரு நினைவும் இல்லாமல் செல்லும் காட்சியைப் பார்க்கும் பேறு எனக்கு இல்லை. ஆனுலும் அந்தக் கூட்டம் எவ்வாறு இருக்கும் என்பதை என் கற்பனைக் கண்ணுல் பார்க்க முயன்றேன். பலர் சொல்லிக் கேள்வியுற்ற காட்சிகளும் நாளுக ஊகித்த தோற்றங்களும் என் அகக் கண்முன் வந்தன.

* *

எங்கே பார்த்தாலும் அரோஹரா முழக்கம். அழு வாரும் தொழுவாரும் விழுவாரும் கதறுவாருமாக அன்பர்

கூட்டம் நடந்து செல்கிறது. காற்றும் வெயிலும் மழையும் இடியும் அவர்களுடைய யாத்திரையைக் குலைக்கும் ஆற்றல் உடையன அல்ல. காட்டு விலங்குகளும் வேட்டுவக் கூட்டத்தினரும் அவர்களைப் பயமுறுத்த முடியாது. சாதி வேறு, சமயம் வேறு, ஊர் வேறு, உணவு வேறு, தொழில் வேறு, கௌரவம் வேறு என்று வேறு பிரித்து அறியும் மனித சாதியினரே இந்தச் சாலையிற் போகிறார்கள். ஆனால் இங்கே அந்த வேறுபாடுகளுக்கே இடமில்லை. யாவரும் ஒரே நிலையிலே ஒரே நினைவோடே இருக்கிறார்கள். கதிர்காம வேலனைக் காணத் துடிக்கும் ஆவல் கொண்டவர்கள், தங்களையே மறந்து, கதிர்காமத் திருமுருகன் அருட் செல்வத்தைப் பெற ஏங்கி நிற்கும் ஏழையர்களின் கூட்டமாகச் செல்கிறார்கள். பல காதங்கள் காலால் நடந்து வந்தோர் பலர்; சொந்தக் காரிலே வந்தவர் பலர்; பஸ்ஸிலும் ரெயிலிலும் வந்தோர் பலர்; இத்தனை பேரும் இப்போது காலால் நடக்கின்றனர். அவர்களுக்குள்ளே வேற்றுமை இல்லை. இறைவன் நினைவாகிய செல்வமுடையவர்களாதலால் எல்லோரும் பணக்காரர்களே.

மழுங்க முண்டிதம் செய்த தலையுடன், கழுத்தில் ருத்திராட்ச மாலையும், இடையில் காவியுடையும், உடம்பெல்லாம் திருநீறும் அணிந்த பரதேசி அதோ செல்கிறார். நன்றாகத் தாடியையும் மீசையையும் வளரவிட்டுச் சடை வளர்த்த சாமியார் ஒருவர் இதோ வருகிறார். அழகாகத் திருநீற்றைத் திரிபுண்டரமாக இட்டு, உச்சிக் குடுமியும் இடையில் கச்ச வேஷ்டியும் அணிந்த சைவ அன்பர் ஒருவர் வருகிறார். பார்க்கும்போதே யாரோ காட்டுமிராண்டி என்னும்படியான தோற்றமும் கந்தலாடையும் உடைய ஏழை அவருக்கு அருகிலே நடக்கிறான். ஆடையாபரணங்கள் அணிந்த செல்வரும் அவர் மனைவியும் உடன் வருகின்றனர். காவடி சுமப்போர் ஒருபுறம், திருநீற்றை ஏந்துவோர் ஒருபுறம், வேல் கைக்கொண்டோர் ஒருபுறம்,

சாம்பிராணிக் கலசம் கொண்டோர் ஒருபுறம். சிறு குழந்தையை ஏந்தி வரும் தாயும், அவளுக் கருகில் தலை நரைத்த மூதாட்டியும் வருகிறார்கள். உலகத்தில் உள்ள மக்கட் கூட்டத்தினரில் எத்தனை வேறுபாடு உண்டு என்பதை இந்தக் கூட்டத்திலேயே கண்டு தெரிந்துகொள்ளும் படியாக இருக்கிறது, அவர்களுடைய காட்சி.

புனுகு படியும் மேனியிலே புழுதி படியச் செல்வார் பலர். மாசில்லாத ஆடையிலே மண் படியப் போவார் பலர். கதிர்காமத்தைப் பலகால் பார்த்தாரும், முதல் முறையாகக் காணச் செல்வாரும், பிரார்த்தனையை நிறைவேற்றச் செல்வாரும் பலர். சைவ மக்களும் பௌத்த ஜனங்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிமானவர்களுங்கூட இந்தக் கூட்டத்தில் பரவி யிருக்கின்றனர். கதிர்காம வேலவன் எல்லா மதத்தினருக்கும் எல்லாச் சாதியினருக்கும் உரிய சமரசத் தெய்வம் என்பதை இந்த அடியார் கூட்டம் புலப்படுத்துகிறதே!

கூட்டம் கூடும் இடங்களிலும், திருவிழாக் கூட்டங்களிலும் வம்புப் பேச்சும், காணமற் போவோரைக் கதறி அழைக்கும் கூச்சலும், பண்டம் விற்பவர்களின் பேரிரைச்சலும் காண்பது இயல்பு. எங்கே கூட்டம் கூடினாலும் அங்கே விற்பனையும் விளம்பரமும் இல்லாமல் இருப்பதில்லை. இது வியாபார உலகம்; விளம்பர யுகம். இங்கேயோ வம்புப் பேச்சுக்கு வாயில்லை; பண்டம் விற்பவருக்கு வேலை இல்லை. எங்கும் யார் வாயிலும் ஒரே முழக்கந்தான். "அரோஹரா! அரோஹரா! அரோஹரா!" என்ற முழக்கம் காது செவிடுபடக் கேட்கிறது. அப்படிச் சொல்வது தவறு. வம்புப் பேச்சையும் மற்றச் சத்தங்களையும் கேட்டு மாசு படிந்த அந்தச் செவிகளினூடே, அரோஹரா முழக்கம் புகுந்து துளைத்து உள்ளே சென்று உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டுகிறது.

இத்தகைய கூட்டத்திலே கலந்துகொண்டு பழக்கமில்லாத மக்கள்கூடத் தங்களை அறியாமலே "அரோ

ஹரா!" என்று கத்தத் தொடங்குகிறார்கள். முதலில் அவர்கள் 'அரோஹரா!' என்று வெளிப்படையாகச் சொல்ல நாணி முணுமுணுக்கிறார்கள்; பழைய வாசனை! பிறகு அந்தச் சப்தம் காதிலே புகுந்து மனத்திலே உறைக்கும் போது உதடுகள் அசையச் சொல்கிறார்கள்; அடுத்த தடவை வாய் திறந்து மெல்லச் சொல்கிறார்கள். பிறகு—? என்ன ஆச்சரியம்! எல்லோரையும் விட உரத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆசையோ என்னவோ! தம் தொண்டையின் வலிமை முழுவதையும் கூட்டி, 'அரோஹரா!' என்று முழங்குகிறார்கள். அடியார் கூட்டம் அதில் சேர்கின்ற எல்லோரையும் மயக்கி விடுகிறது; தன் வசமாக்கி விடுகிறது; எல்லோரையும் ஒரேமாதிரி இயக்கிவிடுகிறது.

'அரோஹரா!'போட்ட பிறகு உடம்பு புல்லரிக்கிறது; வேர்க்கிறது; ஒருவிதமான மதமதப்பு ஏற்படுகிறது. இது வரையில் நாம் காலை எடுத்து வைத்தோம்; கையைத் தலை மேலே கூப்பினோம்; அரோஹரா என்று கூவினோம். இந்தப் புதிய உணர்ச்சி ஏற்பட்ட பிறகு கால் தானாகவே நடக்கிறது; கை தானாகக் குவிகிறது; வாய் தானாகவே முழங்குகிறது. உடம்பு வேறு, நாம் வேறு என்பது போன்ற உணர்ச்சி உண்டாகிவிடுகிறது. கால்கள் என்ற சக்கரத்தின் மேல் உடம்பாகிய வண்டி செல்ல, அதன் மேலே நாம் சுகமாக அமர்ந்து செல்வது போலத் தோன்றுகிறது. மைல் கணக்காக நடந்தாலும் வலியோ இளைப்போ தோன்றாதென்ற உறுதி ஏற்படுகிறது. நம்மை அறியாமலே கண்ணீர் வழிகிறது. உடம்பு பஞ்சுபோல ஆகிக் கனம் குறைந்து விட்டதுபோலத் தோன்றுகிறது.

என்ன அற்புதமான அநுபவம்!

* * *

கற்பனை யாத்திரையிலிருந்து விழித்துக்கொண்டேன். என் கண்களில் நீர் அரும்பி இருந்தது. அன்பர்கள் பார்க்

காமல் இருக்கவேண்டுமென்று அதைத் துடைத்துக்கொண்டேன். கார் போய்க்கொண்டிருந்தது.

இருமருங்கும் அடர்ந்த காடுகள். இடையிடையே கீரிப் பிள்ளையும் பாம்பும் சாலையிடையே ஓடின. குரங்குகள் பல்லைக் காட்டின. அங்கே உள்ள குரங்குகள் நரையும் கருமையும் உள்ள குரங்குகள். முகத்தில் மயிர் அடர்ந்தவை; கருங் குரங்கைப் போன்ற தோற்றம் உடையவை; ஆனால் அத்தனை கருமை இல்லை.

'எவ்வளவோ காலமாக, இந்தச் சாலை உண்டாகாததற்கு முன்பே, பக்தர்கள் காலால் நடந்து வழி உண்டாக்கி வந்து, கதிர்காம முருகனைத் தரிசித்து ஆனந்த மடைந்தார்கள். அவர்கள் வழி நடையில் உண்டான துன்பத்தையே மறந்திருப்பார்கள். உடம்புணர்ச்சியே இல்லாமல் போயிருக்கும்' என்று நினைத்தேன்.

"கதிர்காமத்துக்கு வந்துவிட்டோம்" என்றார் அன்பர்.

"எங்கே?"

"இதோ மாணிக்க கங்கை! இதற்கு அக் கரையிலே தான் கோயில் இருக்கிறது" என்று தெரிந்தவர்கள் சொன்னார்கள்.

எங்கள் முன்னே மாணிக்க கங்கை அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது.

## 3

## மாணிக்க கங்கை

> **"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு**
> **வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!"**

என்று தாயுமான ஸ்வாமிகள் பாடினார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் சிறப்பாக எல்லா இடங்களிலும் அமைவதில்லை. தலந்தோறும் தீர்த்தங்கள் இருக்

தாலும் அவை ஒரு நதிக்கு ஈடாகா. ஆற்று நீர் எப்போதும் புதியது; தூயது; ஓட்டம் உடையது; முறுக்கேற்றுவது. சோழ நாட்டில் உள்ள திருத்தலங்களில் பெரும்பாலானவை காவிரியின் அழகிய கரையிலே அமைந்திருக்கின்றன.

கதிர்காமத்திலும் இத்தகைய சிறப்பு உண்டு. அங்கே உள்ள ஆறு சாமான்ய ஆறு அல்ல; கங்கை. வெறும் கங்கை கூட அல்ல; **மாணிக்க கங்கை.** பெயரைக் கேட்டாலே மனசுக்கு இன்பம் உண்டாகிறது. "மணிதரளம் வீசி அணியருவி சூழ மருவு கதிர்காமப் பெருமாளே" என்ற அருணகிரி நாதர் பாட்டைக் கேட்டும் பாடியும் வந்த எனக்கு அப் பெருமான் கூறும் மணிதரளம் வீசும் அணியருவி இன்னதென்று அப்போது புலப்பட்டது. மாணிக்க கங்கையைத்தான் அருணகிரியார் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

"இதற்கு ஏன் மாணிக்க கங்கை என்று பெயர் வந்தது?" என்று ஒருவரைக் கேட்டேன். "இதில் மாணிக்கம், வைரம் எல்லாம் வருமாம். இந்த ஆறு வரும் வழிகளில் அப்படிப்பட்ட இடங்கள் உண்டு. ரத்தினபுரி என்ற இடத்தின் வழியாக இது வருகிறது" என்று சொன்னார்.

அவருடைய வார்த்தைகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதைச் சோதிக்க வேண்டும் என்ற மன இயல்பு எனக்கு அப்போது இல்லை. மாணிக்க கங்கையோடு மணிகளும் ரத்தினங்களும் கற்பனையிலேயாவது சேர்ந்திருக்கின்றனவே என்று எண்ணி உள்ளம் பூரித்தேன். அழுக்கு நிரம்பிய பொருள்களினூடே வரும் சில ஆறுகளை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றின் பெயரைச் சொன்னாலே சாக்கடையும் சகதியுமே நினைவுக்கு வரும். பெயர் மாத்திரம் அழகாக இருக்கும்; நீர் ஓடுவதனால் ஆறு என்ற பெயரும் பொருத்தமாகவே இருக்கும். ஆனால் அவை

நம்முடைய மனத்திலே இனிய எண்ணங்களையும், தூய நினைவுகளையும் எழுப்புவதில்லையே! இந்த மாணிக்க கங்கையோ, அன்பர்களுடைய மனத்தில் மணி மணியான காட்சிகளை நினைக்கச் செய்தது.

இலங்கையில் எல்லா ஆறுகளையும் கங்கை என்றே வழங்குகிறார்கள். மாவலி கங்கை என்ற ஓர் ஆற்றைக் கூட நான் பார்த்தேன். ஆற்றைச் சிங்கள மொழியில் **ஓயா** என்று சொல்வார்கள். மாணிக்க கங்கையின் சிங்களப் பேர் **பரப்ப ஓயா** என்று ஓர் அன்பர் எழுதியிருக்கிறார்.

மாணிக்க கங்கையின் கரையிலே நின்றோம். அங்கே ஒரே ஒரு சிறிய கடை இருந்தது. "கோவிலுக்குப் போவதற்குப் பழம் தேங்காய் எல்லாம் வேண்டாமா?" என்று கடைக்காரன் கேட்டான். அழகிய ஆற்றைக் கண்டபிறகு அதில் நீராடாமல் போவதா? நண்பர்களும் நானும் மாணிக்க கங்கையில் நீராட முற்பட்டோம். அப்போது பத்து மணி யிருக்கும். வெயில் நன்றாக வீசி அடித்தது. ஆகவே ஆற்றில் நீராடுவது மிகவும் சுகமாகத்தானே இருக்கும்?

மாணிக்க கங்கையின் இருபுறமும் மிக உயர்ந்த மருத மரங்கள் வளர்ந்திருந்தன. என் கண்ணுக்கு இலங்கையிலுள்ள எல்லா மரங்களுமே மிக உயரமானவைகளாகவே தோன்றின. அங்கே வளரும் பலாமரம், நம் ஊர்த் தென்ன மரத்தின் உயரம் இருக்கிறது. அப்படியானால், இயற்கையாகவே ஓங்கிப் பருத்து வளரும் மருத மரத்தைப் பற்றிக் கேட்பானேன்? அர்ஜுன விருட்சம் என்று மருத மரத்துக்கு வடமொழியில் பெயர் வழங்கும். தமிழ் நூல்களில் நீர் வளமும் நிலவளமும் நிரம்பியுள்ள இடமாகிய மருத நிலத்துக்கு இந்த மருத மரந்தான் அடையாளம். வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகிய மருதம் என்ற திணைக்குப் பெயர் கொடுத்தது மருத மரம். எங்கே நீர் வளம் உண்டோ அங்கே மருத மரம் வளரும்.

மருதமரம் என்றாலே மூன்று தலங்கள் நினைவுக்கு வருகின்றன. இந்தியாவில் வடக்கே உள்ள மல்லிகார்ஜுனம் மருத மரத்தைத் தல விருட்சமாகக் கொண்டது; அதனை ஸ்ரீ சைலம் என்றும் சொல்வார்கள். அது தலை மருதூர். தமிழ் நாட்டின் பகுதியாகிய சோழ மண்டலத்தில் மற்றோர் அர்ஜுன க்ஷேத்திரம் அல்லது மருதூர் இருக்கிறது. அதுதான் திருவிடை மருதூர். இடை மருதூராகிய அதை வடமொழியில் மத்தியார்ஜுனம் என்று சொல்லுவார்கள். தலையும் இடையும் இருந்தால், மூன்றாவதாகக் கடை ஒன்று இருந்துதானே ஆகவேண்டும்? பாண்டி நாட்டில் திருப்புடைமருதூர் என்ற தலம் இருக்கிறது; இது, புடார்ஜுன புரம் என்று வடமொழியில் வழங்கும். இன்னும் பல இடங்களில் மருதமரம் உண்டு.

மருதமரம் என்றால் இத்தனை நல்ல நினைவுகள் எழும். இந்தத் தெய்வத் திருத் தலங்களின் நினைப்போடு கதிர்காமத்தின் நினைப்பும் சேர்ந்து எழுவதற்குக் காரணமாக மாணிக்க கங்கையின் கரையில் மருதமரங்கள் உயர்ந்தோங்கி நின்றன.

ஆறு அதிக அகலம் இல்லை; ஐம்பது அறுபது அடி அகலந்தான் இருக்கும். அப்பொழுது அதிக வெள்ளமும் இல்லை. ஒன்றரையடி நீரே ஓடிக்கொண்டிருந்தது. சிறிதும் அச்சமின்றி இறங்கி உட்கார்ந்தபடியே, மேலே தண்ணீரை வாரி இறைத்துக் கொள்ளலாம். தெளிந்த நீர் ஓடுகின்ற ஆற்றில் குளிப்பதே ஓர் ஆனந்தம். மாணிக்க கங்கையில் உட்கார்ந்தால் இடுப்பளவு வரும் நீர்தான் ஓடியது. ஓட்டம் இடையறாமல் இருந்ததால் எங்கும் மணற்பாங்காக இருந்தது. தண்ணீரை இறைத்து, விளையாடிக் குளிப்பவர்களுக்கு உல்லாசமாக இருக்கும்.

நீராடினேன். அங்கே ஒரு மரம் கிடந்தது. வேறு கல் இல்லை. காவிரி யாற்றில் நீராடிய பழக்கம் அங்கும் வந்து விட்டது. அந்த மரத்தையே கல்லாகக் கொண்டு

ஆடையைத் துவைத்தேன். நெடுந்தூரம் பிரயாணம் செய்த தனால் உடம்பிலே அலுப்பு இருந்தது; அழுக்கும் இருந் தது. நம்முடைய உடம்பைக் கண்டு நாமே அருவருக்கும் நிலைகூடச் சில பிரயாணங்களில் வந்து விடுகிறது அல்லவா? இந்த அலுப்பும் அழுக்கும் மாணிக்க கங்கையின் தூய நீரில் மூழ்கியவுடன் ஓடிப்போய் விட்டன. உடம்பிலே மாத்திரம் குளிர்ச்சி உண்டாகவில்லை; உள்ளத்திலும் குளிர்ச்சி உண்டாயிற்று. கதிர் காமப் பெருமானைத் தரிசிக்கப் போகின்றோம் என்ற நினைவும், அந்த நினைவிலே எழும் இன்ப உணர்ச்சியும் என் உள்ளத்தை ஆட்கொண்டன. பல மைல் தூரத்திலுள்ள தமிழ்நாட்டில், சதா சடசட சத்தமும் கடகட முழக்கமும் உள்ள சென்னையில் உள்ள வன் என்ற நினைவே அப்பொழுது அகன்றுவிட்டது. ஏதோ இன்ப உலகத்துக்குப் போகச் சித்தமாக இருக்கிற வன் எப்படி மற்றவற்றையெல்லாம் மறந்து அதையே நினைந்து நிற்பானோ அப்படித்தான் நான் இருந்தேன்.

காரை மாணிக்க கங்கை வழியாகவே ஓட்டி அக் கரைக்குப் போகும் வழி ஒன்று இருந்தது. ஆனாலும் அந்தத் தூய நீரோட்டத்தைக் கலக்க மனமின்றி இக்கரை யிலேயே காரை நிறுத்திவிட்டோம். இப்போது மாணிக்க கங்கை வீட்டுக்கு அடங்கின பெண்ணைப்போலச் சென்றா லும், வெள்ளம் வந்தால் இரு கரையும் புரண்டு ஓடு மென்றே தெரிகிறது. அதைக் கடக்க மிக உயரமாக ஓர் ஆடும் பாலம் கட்டியிருக்கிறார்கள். அதைக் கொண்டு இதை நான் ஊகித்தேன். ஆற்றில் கால்களை நட்டு அவற் றின்மேல் பாலத்தைக் கட்டாமல் இரண்டு கரையிலும் தூண்கள் நட்டு அவ்விரண்டுக்கும் நடுவில் பாலத்தைத் தொங்கவிட்டிருக்கிறார்கள். இதைத் 'தொங்கும் பாலம்' என்று கூடச் சொல்வார்கள். கீழே பற்றுக்கோடின்றித் தொங்குவதனால் இதன்மேல் ஏறி நடக்கும்போது, பாலம் ஆடுகிறது. மாணிக்க கங்கையை ஆடும் பாலத்தின் வழியா

கக் கடக்கவேண்டும் என்பதில்லை. முழங்கால் அளவுகூட நீர் ஓடாத ஆற்றில் இறங்கிக் கடந்துவிடலாம். வெள்ளம் வரும் காலத்தில் இந்தப் பாலம் அவசியமாக இருக்கு மென்று நினைக்கிறேன்.

நாங்கள் போனபோது வெள்ளம் இல்லை. சிலர் ஆற்றில் இறங்கிச் சென்றார்கள். சிலர் பாலத்தின் வழியே சென்றார்கள். அது ஆடுகிறதே அதைப் பார்ப்பதற்காக அதன் வழியே செல்பவர்களே பலர்.

வாழ்க்கை யென்னும் ஆற்றைக் கடப்பவர்களிலும் இப்படி இரண்டு வகையினர் இருக்கிறார்கள். வாழ்க்கை யின் இன்ப துன்பங்களில் நனைந்து அதனைக் கடப்பவர்கள் பலர்; வாழ்க்கையில் பக்தி என்ற பாலமிட்டு ஆடிப் பாடி, இன்ப துன்பங்கள் உள்ளத்தில் ஒட்டாமல், ஆனந்தமாகக் கடப்பவர்கள் சிலர். வெள்ளம் வந்து விட்டால் பின்னவர் களுடைய ஆனந்தத்துக்குக் குறைவராது. வாழ்க்கையி லேயே இறங்கினவர்கள் பாவம், சில சமயம் மூழ்கியே போய்விடுகிறார்கள்!

பழம், கற்பூரம் எல்லாம் அங்கிருந்த சிறிய கடையில் வாங்கிக்கொண்டோம். ஆடும் பாலத்தின் வழியே மாணிக்க கங்கையைக் கடந்து கதிர்காம வேலன் சந்நிதி வீதியை அடைந்தோம்.

## 4

## சந்நிதி


கதிர்காமத்தில் சந்நிதி வீதிக்கு வந்திருக்கிறோம் என்ற நினைவிலே இன்பம் உண்டாயிற்று. எல்லா வசதி களும் அமைய, வேகமான காரில் வந்த எங்களுக்கே இந்த உணர்ச்சி ஏற்பட்டால், பல காலமாகக் கதிர்காம தரிசனம் செய்யவேண்டு மென்று எண்ணி எண்ணி முயன்று, வேண்டிய வசதிகளை அங்கங்கே செய்து கொண்டு

காலால் நடந்து வரும் அன்பர்களுக்கு உண்டாகும் அநுபவத்தை என்னவென்று சொல்வது! பசிக்கப் பசிக்க உணவுக்கு ருசி அதிகமாகிறது. நாட்பட நாட்படப் பிறக்கும் குழந்தையின் அருமை மிகுதியாகிறது. பல நாள் பிரிந்து, காணவில்லையே என்ற ஏக்கம் மிக மிகப் பின்னுலே அமையும் கூட்டுறவிலே ஆனந்தம் எல்லையற்ற தாகிறது. அப்படியே இறைவன் எழுந்தருளியிருக்கும் தலம் எவ்வளவு அடைய அரியதாக இருக்கிறதோ, அவ்வளவு அதன்பால் மதிப்பும், தரிசனத்தின்போது உணர்ச்சியும் மிகுதியாகின்றன. மலைமேலே கோயில்களைக் கட்டிப் பிரார்த்தனை செலுத்துவதற்கு அங்கே போக வைத்த பெரியோர்கள், மனிதனுடைய மன இயல்பை எவ்வளவு நுட்பமாக உணர்ந்திருக்கிறார்கள்! வருத்தமின்றிக் கிடைக்கும் பொருளில் மனிதனுக்கு அருமைப்பாடு பிறப்பதில்லை.

கடல் கடந்து நாடு கடந்து காடு கடந்து கதிர்காம வேலனைத் தரிசிக்க வந்த பழங்கால அன்பர்களுக்கு நிச்சயமாக அதிகமான இன்ப உணர்ச்சி ஏற்பட்டுத்தான் இருக்கும். மனசிலே அன்பு முதிர்ந்தவர்களுக்கு ஆண்டவனை எங்கே கண்டாலும் நெஞ்சு நெகிழும். அத்தகையவர்களுக்கு எல்லாப் பொருளிலும் இறைவனைக் கண்டு உருகும் ஆற்றல் இருக்கும். கனத்த கல்லாகிய நெஞ்சை யுடையவர்களுக்கு அந்தக் கல் நெகிழ்ந்து கசிந்து கரைந்து உருக வேண்டுமே! அதற்காகத்தான் இப்படியெல்லாம் அலைந்து திரிந்து தேடிக் கண்டுபிடித்தால், தலங்களிடம் மதிப்பு ஏற்படுமென்று ஆன்றோர்கள் கருதியிருக்க வேண்டும்,

கதிர்காமத்தில் பல தெருக்கள் இல்லை. சந்நிதி வீதி ஒன்றுதான் பெரியது. வேறு ஒன்றிரண்டு சிறிய வீதிகள் இருக்கின்றன. கதிர்காமத்தை மக்கள் வாழ்வதற்காக அமைந்த ஊரென்று சொல்லக் கூடாது. அது கோயிலும் மடங்களும் உள்ள தலம். வீதிகள் முழுவதும் மடங்களும் சத்திரங்களுமாக இருக்கின்றன. தல யாத்திரையாக

வரும் ஜனங்களுக்கு வேண்டிய பொருளை வியாபாரம் செய்யச் சில சிறு கடைகள் இருக்கின்றன. நாங்கள் சென்ற காலம் எந்த விதமான உற்சவமும் இல்லாத காலம்; ஆகையால் கூட்டமே இல்லை. ஆரவாரம் சிறிதும் இல்லாமல் இருந்தது. தமிழ்நாட்டில் உள்ள சிறிய கிராமம் போலத் தோன்றியது. ஆனால் சிறிய கிராமத்தில் அத்தகைய கட்டடங்களைக் காணமுடியாது. உற்சவ காலங்களில் பக்தர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகளை யுடைய பல சத்திரங்கள் கதிர்காமத்தில் இருக்கின்றன.



திசைமாராவிலுள்ள பௌத்தர் ஆலயம்.

சந்நிதி வீதி தென்வடலாக இருக்கிறது. வடக்குக் கோயில் முருகனுடைய திருக்கோயிலாயும், தெற்குக்

கோயில் வள்ளியம்மையார் கோயிலாயும் உள்ளன. முருகன் சந்நிதி தென்முகம் நோக்கி யிருக்கிறது. ஞானகுரு மூர்த்தி தென்முகமாக நோக்கி யிருப்பது மரபு. சனகாதி முனிவர்களுக்கு ஒப்பரிய மோனத்தைச் சின்முத்திரை யினால் சொல்லாமற் சொன்ன தட்சிணாமூர்த்தி தென்முகம் நோக்கி எழுந்தருளி யிருக்கிறார். தம்முடைய தூக்கிய திருவடியால் அநுக்கிரகத்தைக் காட்டுவதோடு தென் றிசைத் தலைவனாகிய யமனை இன்னும் ஓட்டுவேன் என்னும் குறிப்பை அருளும் நடராசப் பெருமானும் தென்திசை நோக்கி ஆடுகிறான்.

உலகில் உள்ள மக்கள் பல பல திசைகளிலே பிரயா ணம் செய்கிறார்கள். அந்தப் பிரயாணத்துக்குரிய வாக னங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. உண்மையில் அவர்கள் தென்திசையை நோக்கியே ஒவ்வொரு நாளும் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள். காலனுடைய கைப் படுவ தற்காகவே தென்றிசையை நோக்கிச் செல்கிறார்கள். ஒரு மனிதனுடைய ஆயுள் எண்பது என்று வைத்துக் கொள் வோம். அவன் அறுபது ஆண்டுகள் வாழ்கிறான். இன்னும் இருபதாண்டு தூரம் அவன் பிரயாணம் இருக்கிறதென்று நாம் கணக்குப் பண்ணவேண்டும். இந்த உலகில் வாழும் ஒவ்வொரு நாளும் நம்மைக் காலனுடைய கைப்பிடியில் அகப்படும்படியாக உந்துகிறது. காலனூருக்குப் போகும் திசையில் ஒவ்வோராண்டும் ஒவ்வோரடி முன்னேறிக் கொண்டே இருக்கிறோம்.

**“ நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின் ”**

என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஒவ்வொரு நாளும் நம் வாழ்வைக் குறைத்துக் காலனூருக்கும் நமக்கும் உள்ள தூரத்தையும் குறைக்கிறது. பிரபஞ்ச வாழ்க்கைப் பிரயாணத்தில் நம்முடைய நடை தென் முகம் நோக்கி

யிருக்கிறது. தெற்குப் பட்டினத்துக்குப் போக விரைந்து கொண்டிருக்கிறோம்.

" சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே "

என்று மணிவாசகர் கூறுகிறார்.


தென்றிசையில் இருந்துகொண்டு, எவ்வளவு பெரிய வனைக இருந்தாலும் நம் கைப் பாசத்தில் வந்துதானே விழ வேண்டும் என்று யமன் நினைத்து இறுமாந்து கொண்டிருக்கிறான். நாமும் அவன் இறுமாப்பை அதிகமாக்க அவனூரை நோக்கி நடை போடுகிறோம்.

இதற்கு நேர் எதிரான திக்கில் ஆண்டவன் அமர்ந்து எச்சரிக்கை செய்கிறான். கோயில் காட்டிக் கோபுரங் காட்டி மதில் காட்டி, "வடக்கே திரும்பு அப்பா" என்று குறிப்பிக்கிறான். "என்னைத் தரிசிக்க வேண்டுமென்று நீ எப்போது நினைத்து முதலடி வைக்கிறாயோ, அப்போதே நீ பிழைத்துப் போனாய். என் சந்நிதி நோக்கி வைக்கும் ஒவ்வோரடியும் உன்னைத் தெற்குத் திசைத் தலைவனிடமிருந்து விலகி நிற்கச் செய்கிறது. வா, இங்கே வா; வடக்கு நோக்கி வா" என்று குமரகுருபரனாகிய ஞான சக்திதரன் அழைக்கின்றான். தெற்கே போய்க்கொண்டிருக்கிற நாம் சற்றே திரும்பிப் பார்த்தால் போதும். நேர் எதிரே தென் திசையின்மேல் திருவிழிப் பார்வையைச் செலுத்தி அஞ்சலென்ற கரதலத்தையும், ஆள்வேனென்னும் திருவடியையும் காட்டிக் கொண்டு முருகன் வீற்றிருக்கிறான். அவன் திருக் கோயிலுக்குச் செல்லும்போதே நம்முடைய பயணம் மாறுகிறது; தென் திசைக்கு எதிரான யாத்திரையாக மாறுகிறது. 'சாமாறு' விரைந்து கொண்டிருந்தது போய், 'ஆமாறு' விரையும் முயற்சி ஆரம்பமாகிறது.

கதிர்காம வேலவன் சந்நிதி தெற்கு நோக்கி அமைந்திருப்பதில் எத்தனை உயர்ந்த கருத்துக்கள் பொருந்தி

யுள்ளன என்று சிந்தித்தேன். மாணிக்க கங்கையைக் கடந்தாலே பாவ புண்ணியக் கரைகளைக் கடந்து விடுகிறோம். "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்று வள்ளுவர் சொல்லும் நிலை வந்ததுபோலத் தோன்றுகிறது. அப்பால் கதிர்காம நாதன் சந்நிதி வீதியிலே வந்து அவன் திருக் கோயிலை நோக்கி நடக்கும்போது, நாம் யமனைப் புறக் கணித்து ஞானகுருநாதனுடைய ஞான வெளியை மெல்ல மெல்ல அணுகுகிறோம்.

கதிர்காம வேலவன் திருக்கோயிலை அணுகிக் கொண் டிருந்தோம். அங்கே மலை இல்லை; மண்டபங்கள் இல்லை. முன்னே ஒரு வளைவு (Arch) இருக்கிறது. நம்முடைய



திருக்கோயிலின் முன் உள்ள வளைவு

நாட்டில் அரசாங்கக் காரியாலயத்துக்கு முன்னே இருப்பது போல ஆரைச் சுவரும், அதனூடே செல்ல இந்த வளைவும்

இருக்கின்றன-அதனை இந்த நூற்றாண்டிலோ, போன நூற்றாண்டிலோ யாரோ கட்டியிருக்கவேண்டும். அந்த வாயில் வளைவினூடே புகுந்தோம். உள்ளே சில கஜங்களுக்குத் திறந்த வெளி; அப்பால் திருக் கோயில் இருக்கிறது. வளைவைக் கடந்து கதிர்காம வேலவன் திருக்கோயில் சந்நிதிக்கு வந்துவிட்டோம்.

முருகனுக்குரிய படை வீடுகளை நான் தரிசித்திருக்கிறேன். உலக நினைவையே போக்கி முருகு மணத்தில் ஆழ்த்தும் திருச்செந்தூரைத் தரிசித்திருக்கிறேன். பழனி, திருப்பரங்குன்றம், திருவேரகம் ஆகிய தலங்களையும் பார்த்திருக்கிறேன். வேறு பல திருக் கோயில்களையும் கண்டு தரிசித்திருக்கிறேன். தமிழ் நாட்டுத் திருக் கோயில்கள் உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காத அற்புதங்கள். பலகாலம் அமைதியாக வாழ்ந்த சமுதாயத்தின் கலைக் கொழுந்து கோயில்; பக்தியிலே ஊறிய மக்களின் அன்பைக் காட்டும் அடையாளம் கோயில்; வேற்றுமைகளை மறந்து இறைவன் திருமுன் அடங்கி ஆணவங் கழலச் செய்யும் அதிசய சக்தியையுடைய இடம் கோயில். அந்தக் கோயில்களை யெல்லாம் கண்ட கண்களால் கதிர்காம வேலவன் கோயிலைப் பார்த்தால் கவர்ச்சி இராது. அதைக் கோயி லென்றே சொல்லத் தோன்றாது. நம்முடைய கிராமங்களில் மாரியம்மன் கோயில், பகவதியம்மன் கோயில் என்ற சில ஏழைக் கோயில்கள் இருக்கின்றனவே அவற்றைப் போலத்தான் கதிர்காமக் கோயில் இருக்கிறது. ஓடுகள் வேய்ந்த கோயில் அது. ஆனால் அந்த ஓட்டுக் கூரையின் மேல் மூன்று இடங்களில் மூன்று தங்கக் கலசங்கள் மின்னுகின்றன.

புறக் கண்ணுக்குக் கவர்ச்சியில்லாத திருக் கோயில் அது. அதைப் புறக் கண்ணிலே பார்த்த அளவிலே நின்று விட்டால், "இதுதானா பிரமாதம்?" என்ற நினைவே தோன்றும். உற்சவ காலங்களில் ஆயிரக் கணக்கான மக்கள்

பக்தி ஆவேசத்தால் ஆடிக் கூத்திடும்போது இங்கே வந்திருந்தால், அந்தச் சூழ்நிலையினால் நம் உள்ளத்தில் ஒரு வகையான எழுச்சி உண்டாகலாம். ஆனால் மற்றக் காலத்தில் இங்கே வந்தால், இந்தக் கோயிலைக் கண்ட மாத்திரத்தில் எந்த விதமான உணர்ச்சியும் தோன்றாது. மனத்திலே பக்தி இருக்க வேண்டும்; கதிர்காம வேலனுடைய புகழைப் பிறர் சொல்லக் கேட்டிருக்கவேண்டும்; நூல்களில் படித்திருக்கவேண்டும். அப்போது இந்த ஓட்டு வில்லைத் திருக்கோயிலே கந்தலோகமாகக் காட்சியளிக்கும். நம்முடைய மனப் பக்குவத்தை அளவிடுவதற்கு ஆண்டவன் இந்த மூலைக் காட்டில் ஓட்டுக் கூரைக் கோயிலில் எழுந்தருளியிருக்கிறான். மனம் பக்தி யுணர்ச்சியில் ஈடுபடாதவரையில் இங்கே இன்பம் இல்லை.

## 5
## திருக்கோயில்

கதிர்காம மென்னும் தலத்தைப் பற்றிப் பழங்கால முதற்கொண்டு பற்பல வரலாறுகள் வழங்கி வருகின்றன. புராண வரலாறு, கர்ண பரம்பரை வரலாறு, சரித்திர வரலாறு என்று அந்த வரலாறுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கதிர்காமத் தலபுராணம் செய்யுள் வடிவில் **சி. நாகலிங்கம் பிள்ளை** என்பவரால் இயற்றப் பெற்றிருக்கிறது. இத்தலத்தைப்பற்றிச் சொல்லும் வேறு பல செய்யுள் நூல்களும், அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாக்களும் உண்டு.

முருகப்பிரான் சூரனைச் சங்காரம் செய்யும் பொருட்டுத் தென்றிசைக்கண் எழுந்தருளினான். இடையே உள்ள பல தலங்களுக்குச் சென்று அங்கங்கே தங்கி மேற்சென்றான். அப்போது கதிர்காமத்துக்கும் எழுந்தருளி மாணிக்க கங்கையின் கரையில் தன் படைவீட்டை அமைத்துக்

கொண்டு தங்கினன். அந்த இடம் ஏமகூடம் என்று சொல்லப் பெறும். அப்பால் சூரனை நாடிச் சென்று அவனைப் போரில் வென்று மீண்டான். அப்படி மீண்ட பொழுது கதிர்காமம் வந்து, அங்கே நவகங்கைத் தீர்த்தம் என்ற தீர்த்தத்தை உண்டாக்கினன். சிந்தாமணி யாலயத்தில் கோயில் கொண்டெழுந்தருளினன். தேவர்களும் முனிவர்களும் வந்து வழிபட்டு உய்ந்தனர்.

இவ்வாறு **கதிர்காமப் புராணம்** சொல்கிறது. **தக்ஷிண கைலாச புராணத்தில்** பின்வரும் செய்தி உள்ளது.

'பல கோடி கதிரவன் உதித்தாலனைய ஒளிபரப்பும் சிந்தாமணி யாலயத்தில், நவமணி குயிற்றிய சிங்காதனத்தில்,வள்ளியெம்பெருமாட்டியுடனும் தேவயானை யம்மையா



**கதிர்காமத் திருக்கோயில்.**

ருடனும் கதிரைமலைப் பெருமான் வீற்றிருந்தருள்கிருன்... கதிர்காம நகரம் முக்கோண வடிவமான தெருக்களை உடை

யது. அதன் நடுவே ஒரு சோதி மண்டபமாகிய ஆலயம் உண்டு. பொற்றகடு பரப்பி மணிகளை இழைத்த மண்டபம் அது. அதன் நடுவில், இந்திர நீலமணிச் சிங்காதனத்தின்மேல் இரு தேவியரோடு வேலைத் திருக்கரத்திலே பிடித்து முருகன் எழுந்தருளி யிருக்கிறான். இந்தச் சோதி மணி மண்டபத்திற்கு எதிரில் வள்ளியம்மை திருக்கோயில் இருக்கிறது. அதன் அருகிலே சமாதி யோக மண்டபம் ஒன்று உண்டு.'

இந்த வருணனைகளுக்கும் இப்போது உள்ள திருக்கோயிலுக்கும் தொடர்பு ஒன்றும் இல்லை. கோயிலின் திருவாசலில் ஒரு பெரிய பழைய மரக் கதவு இருக்கிறது. அதைத் திறந்தவுடன் முன்னே அர்த்த மண்டபம் என்று சொல்லத் தகும் இடம் ஒன்றைக் காணலாம். அங்கே குத்து விளக்குகள் தூபச் சட்டிகள் முதலியன இருக்கின்றன. அதற்கு அப்பால் உயர்ந்த மேடைமேல் அடுத்த கட்டு இருக்கிறது. அதுதான் கோயில். அதற்கு ஐந்தாறு படிகள் இருக்கின்றன. படிக்கட்டின்மேல் கதவு நிலை இருக்கிறது. ஆனால் அதைத் திரையிட்டு மறைத்திருக்கிறார்கள். திரைக்குப் பின்னால் கர்ப்பக் கிருகத்துக்குள் என்ன இருக்கிறது என்பது, முருகனுக்கும் அங்கே பூசை செய்யும் பௌத்தர்களுக்குமே தெரியும்.

சிவாலயங்களுக்குட் சிறந்தது சிதம்பரம். கோயில் என்று சொன்னாலே அது சிதம்பரத்தைத்தான் குறிக்கும். சிதம்பரத்தில் பொன் மன்றத்தின் உள்ளே என்ன இருக்கிறதென்பது யாவருக்கும் தெரியாது. அது இரகசியம். அதைக் காட்டிலும் பரம இரகசியமாக இருப்பது கதிர் காமக் கோயில்.

கர்ப்பக் கிருகத்தின் திருவாயிலில் தொங்கும் திரையில் முருகன் திருவுருவம் உள்ளது; இரண்டு தேவிமாரோடும்

* கதிர்காமம்—முதலியார் குல. சபாநாதன் எழுதியது; பக்கம், 7.

மயிலின்மேல் வீற்றிருக்கும் திருக்கோலம். இது சமீபத்தில் போட்ட திரை. இந்த ஓவியத் திரை இன்னாரால் உதவப் பெற்றது என்ற குறிப்புக்கூட ஆங்கிலத்தில் திரையின் ஒரு மூலையில் இருக்கிறது. இந்தத் திரைக்குப் பின் சில திரைகள் இருக்கின்றன. அவ்வப்பொழுது கிடைக்கும் திரைகளை ஒன்றன்மேல் ஒன்றாகப் போட்டிருக்கிறார்கள். திருவாயிற் படியின் கீழே நின்று இந்தக் கோயிற் பூசாரி கள் அந்தத் திரைக்கே பூசை புரிகிறார்கள்.

இங்கே பூசை செய்பவர்களைக் கப்புராளைமார் என்று சொல்கிறார்கள். அவர்கள் சிங்களவர்கள்; பௌத்த மதத்தினர். அவர்கள் வாயைக் கட்டிக் கொண்டு மௌனமாகப் பூசை செய்கிறார்கள். தூபதீபம் காட்டி நிவேதனம் செய்கிறார்கள். தரிசனத்துக்கு வருகிறவர்கள் பூசை நடக்கும்போது பார்க்கலாம். மற்றச் சமயங் களிலும் அந்த முன் மண்டபத்தில் நின்று தரிசனம் செய்ய லாம். புறக்கண்ணால் பார்ப்பதற்குத் திரை ஒன்றுதான் இருக்கிறது. அகக்கண்ணால் பார்ப்பதற்கு எத்தனையோ உண்டு.

ஆடி மாதம் இங்கே திருவிழா நடைபெறுகிறது. உள்ளே யிருந்து அப்போது கப்புராளைமார் எதையோ பரிவட்டத்துக்குள் மூடி எடுத்து வருவார்கள். அது விக்கிரகமா, பெட்டியா, வேறு பொருளா என்று தெரியாது. பெட்டி என்றுதான் சொல்கிறார்கள். மூடிய படியே கொண்டுவந்து யானையின்மேல் ஏற்றுகிறார்கள். அலங்கரித்த யானை நின்று இந்தப் பெட்டியை ஏற்றிக் கொள்வதற்காக ஓர் இடம் இருக்கிறது. யானைமேல் ஏற்றிய பிறகு ஊர்வலம் புறப்படும். இந்த உலாவைப் **பெரஹரா** என்று சிங்களத்தில் சொல்கிறார்கள். கண்டியில் நடக்கும் பெரஹரா மிகப் பிரசித்தமானது.

உற்சவத்தின்போது லட்சக்கணக்கான மக்கள் கூடு வார்கள், எல்லோரும் கட்டி கட்டியாகக் கற்பூரத்தை

அகலில் ஏற்றித் தலைமேல் வைத்துக் கொள்வார்கள். கோயிலின் முன்னுள்ள வெளியிலும் குவை குவையாகக் கற்பூரத்தை ஏற்றி வைப்பார்கள். இந்தக் கற்பூர வெளிச்சமே இராக் காலங்களில் பல விளக்குகளை ஏற்றி வைத்ததுபோலத் தோன்றும்.

இந்தக் கோயிலில் ஒவ்வோராண்டிலும் நான்கு திரு விழாக்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதப் பிறப் பன்று ஒரு திருவிழா நிகழும். ஆனி அல்லது ஆடி மாதத்தில் பந்தற்கால் நடும் விழா நடைபெறும். ஆடி அல்லது ஆவணியில் ஒரு திருவிழாவும், கார்த்திகைத் தீபத் தின்போது ஒரு திருவிழாவும் நடக்கின்றன. ஆடித் திருவிழாவே மிகவும் பெரியது. பதினைந்து நாட்கள் இந்தத் திருவிழா தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இறுதியில் நீராட்டு விழாவோடு உற்சவம் நிறைவேறும்.

கதிர்காம வேலனுடைய திருக்கோயிலை அடுத்து, மேல் திசையில் மற்றொரு சிறிய ஓட்டுக் கட்டிடக் கோயில் இருக்கிறது. அது விஷ்ணு கோயில் என்று சொல் கிறார்கள். இலங்கையில் திருமாலையும் ஒரு காவல் தெய்வமாகச் சிங்களவர்கள் கொண்டாடுகிறார்கள். அதன் பின்புறம் ஒரு பெரிய அரசமரம் இருக்கிறது. இந்த மரத்தை மிகவும் புனிதமுடைய தெய்வத் தருவாகப் போற்றி வருகிறார்கள். பௌத்தர்களுக்கு அரசமரம் தெய்வத்தன்மையுடையது. அதனடியில் புத்தர் ஞானம் பெற்றாராதலின், அதனை ஞானத் தருவாக அவர்கள் கொண்டாடுவார்கள். போதி விருக்ஷம் என்று சொல் வார்கள்; இலங்கையில் போ (Bo Tree) என்று வழங்கு கிறார்கள்.

நமக்கும் அரசமரம் புனிதமுடையதுதான். அதனை மும்மூர்த்திகளின் திருவுருவம் என்று நாம் நம்புகிறோம். அரசமரத்தை வலம் வருவதனால் பல நன்மைகள் உண் டென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. சோமவார

அமாவாசைகளில் அரசமரத்தை ஆயிரத்தெட்டுத் தடவை வலம் வரும் வழக்கம் நம் நாட்டில் இருக்கிறது. ஆயினும் அரசமரத்தை வணங்குந் திறத்தில் பௌத்தர்கள் நம்மினும் சிறந்தவர்கள்.

கதிர்காமத்தில் உள்ள அரச மரத்தில் பௌத்தர்கள் வெள்ளைக் கொடிகளைக் கட்டியிருக்கிறார்கள். இது அவர்கள் வழக்கம். அங்கே மண்டியிட்டு வணங்குகிறார்கள். முஸ்லிம்களும் இந்த ஆலயத்துக்கு வந்து தொழுகிறார்கள். முருகன் எல்லாச் சமயத்துக்கும் பொதுவானவன் என்ற நினைவு இங்கே உண்டாகும். குழந்தைப் பிரானிடம் காதல் கூராதவர்கள் யார்? பௌத்தர்கள் கதிர்காமக் கடவுளைக் காவல் தெய்வமாக வைத்து வழிபடுகிறார்கள்.

இந்தக் கோயிலின் எல்லைக்கு அப்பால், இதனோடு ஒட்டிக் கீழ்த் திசையில் தேவயானை அம்மையாருக்கு ஒரு கோயில் இருக்கிறது. அது கிழக்குப் பார்த்த சந்நிதியை உடையது. அதன் விமானம் தமிழ்நாட்டுக் கோயிலில் உள்ளதுபோல இருக்கிறது, அங்கே பூசை புரிபவர் தமிழர். அந்தக் கோயிலின் நிர்வாகமே தனியாக மற்றவர்களிடம் இருக்கிறது.

கதிர்காமக் கோயிலுக்குள்ளே உள்ள பொருள் என்ன? பெட்டி ஒன்று இருக்கிறது என்கிறார்கள். அதற்குள் என்ன இருக்கிறது? அதைக் கண்டாரும் இல்லை; விண்டாரும் இல்லை. யந்திரம் இருக்கிறதென்று சொல்வார் சிலர்; மாணிக்கத்தால் அமைந்த விக்கிரகம் இருக்கிறதென்று கூறுவார் சிலர்; வேல் இருக்கிறதென்று ஊகிப்பவர் சிலர். ஒருவரேனும் இன்னதுதான் இருக்கிறதென்று திட்டமாகச் சொல்வதில்லை. ஆனால் லட்சக்கணக்கான மக்களை இழுக்கும் சக்தி இதனுள்ளே இருக்கிறதென்பது மாத்திரம் உண்மை. அந்தச் சக்தியே இந்திய மக்களை வா வா என்று அழைக்கிறது. உடம்புக்கு நேரும் துன்பங்களையும் பொருட் செலவையும் பாராமல் பக்தர்

களை வந்து மன முருகி வழிபடச் செய்யும் பேராற்றலை யுடையது அது. எத்தனையோ காலமாக அருட் புலவர்களாலும், அன்பர்களாலும், ஞானியராலும், யோகியராலும் பாராட்டப்பெறும் சிறப்புடையது. கடவுள் இல்லை என்ற மயக்க உணர்வு பெருகும் காலத்திலும், மக்களை இழுத்துக் கூத்தாடச் செய்கிறது அது; மூர்த்தி இல்லை; ஆனாலும் கீர்த்தி மிகமிகப் பரந்து பெருகிவருகிறது.

இந்த நாட்டில் பழனியில் முருகன் தண்டாயுதபாணி யாக எழுந்தருளி யிருக்கிறான். ஆனால் தண்டாயுதபாணி எங்கே இருந்தாலும் அவனைப் பழனியாண்டவன் என்று வழங்கும் வழக்கம் உண்டாகியிருக்கிறது. அவ்வாறே கதிர்காம முருகனுக்குக் கதிரேசன் என்று பெயர் வழங்கு கிறது. அந்தத் திருநாமத்தோடு இலங்கையில் பல இடங் களில் முருகன் எழுந்தருளியிருக்கிறான். இந்தியாவிலும் கதிரேசன் கோயில்கள் சில உண்டு. கதிர்காமம் ஓரிடத்தில் தான் இருக்கிறது; ஆனால் கதிரேசன் கோயில்கள் பல இடங்களில் உள்ளன. கதிர்காம முருகனுடைய சிறப்புக்கு இது பெரிய சான்று அல்லவா?

கதிர்காமக் கடவுளின் பெயரைக் குழந்தைகளுக்கு வைப்பவர்களும், அவன் பெயரால் வேறு வேறு இடங்களில் கோயில் கட்டித் தொழுகிறவர்களும், அவன் பேரைச் சொல்லிப் பிழைப்பவர்களுமாகப் பலர் கதிர்காம நினைவை எல்லா இடங்களிலும் எழுப்பிக் கொண்டே இருக்கிறார் கள். இதற்கு முன்பும் பலர் இப்படிச் செய்தார்கள்; இனியும் செய்து வருவார்கள்.

## 6

## தரிசனம்

**நா**ங்கள் கதிர்காமம் சென்றபோது உற்சவம் ஒன்றும் இல்லை. ஆதலின் எங்கும் அமைதியே குடிகொண்

டிருந்தது. மடங்களிலும் கோயிலிலும் சில ஜனங்களே இருந்தார்கள். மாணிக்க கங்கையில் நீராடியபோதே இங்கே பூசை முடிந்துவிட்டது. கோயிற் கதவையும் சாத்தி விட்டார்கள். நாங்கள் புறவாயில் வழியே கோயிலின் முன்னுள்ள வெளியைக் கடந்து கோயிலுக்கு அருகே வந்தோம். கதவு சாத்தி யிருந்தது. "இவ்வளவு தூரம் வந்தும் உள்ளே புகமுடியாமல், தரிசனம் செய்ய இயலாமல் போனால் என்ன செய்வது?" என்ற கவலை எனக்குச் சிறிதே உண்டாயிற்று. ஆனால், அங்கே உள்ள பூசாரியை எப்பொழுது கூப்பிட்டாலும் வருவார் என்பதைக் கேட்ட பிறகே ஆறுதல் பெற்றேன்.

கோயிற் பூசை செய்கிறவர் சிங்களவர். அவர் வந்து கோயிற் கதவைத் திறந்தார். அந்த முன் மண்டபத்தில் கர்ப்பக்கிருகத்துக்குப் போகும் படிகள் இருக்கின்றன. கர்ப்பக் கிருக வாசலில், முன்னே குறித்த திரை இருக்கிறது. கீழே குத்து விளக்குகளும் தூபக்கால்களும் இருக்கின்றன.

பூசாரி எங்கள் கையில் விபூதியைத் தந்தார். அவருக்குத் தமிழ் தெரியாது. சிங்களந்தான் தெரியும். "கருப்பக் கிருகத்துக்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்தது. சிங்கள பாஷை எனக்குத் தெரியாது. தெரிந்தாலும் அவர் உண்மையைச் சொல்லப் போகிறாரா, என்ன?

வெளியிலே யாழ்ப்பாணத்துப் பெண்மணி ஒருவர் கந்தர் அநுபூதியைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார். நாலைந்து முஸ்லிம்கள் தரிசனத்துக்கு வந்திருந்தார்கள்.

கோயிலை வலம் வந்தோம். அங்கிருந்த அரசவிருட்சத்தைக் கண்டவுடன் எங்களுடன் வந்த சிங்களவர் அதை மண்டியிட்டு வணங்கினார். பிராகாரத்தை ஒட்டிச் சின்னச் சின்ன வளைவுக்குள் நாகத்தைப் போன்ற பிம்பங்

கள் வைத்து அவற்றுக்கு முன் சிறிய விளக்கை ஏற்றி வைத்திருந்தார்கள்.

பின்பு கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள தெய்வயானை கோயிலுக்குச் சென்றோம். அங்கே கல்யாண மண்டபம் என்ற இடத்தில் ஒரு துறவி இருந்தார். பரம்பரையாக இந்தத் தெய்வயானை யம்மன் கோயில் நிர்வாகம் இத்தகைய துறவிகளிடம் இருந்து வருகிறதாம். யாழ்ப்பாணத்தி லிருந்து வந்த குருக்கள் சிலர் அங்கே இருந்தார்கள். "எங்கே சாப்பிடப் போகிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார். வேறு இடத்தில் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னோம். அங்கே வரும் அன்பர்களுக்கு உணவளிக்கும் கைங்கரியத்தில் அவர்கள் ஈடுபட்டவர்கள் என்று அறிந் தேன். தர்மத்துக்கு அல்ல; காசுக்குத்தான்.

வீதியில் உள்ள மடங்களில் சிலவற்றைப் பார்த் தோம். பிறகு வள்ளியம்மை கோயிலுக்குச் சென்றோம். கதிர்காம எல்லைக்குள் எந்தக் கோயிலானாலும் அதில் திரைதான் போட்டிருக்கிறார்கள். அந்தத் திரைக்குத்தான் பூசை. வள்ளியம்மை கோயிலுக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு முஸ்லிம் பக்தருடைய சமாதி இருக்கிறது. அவர் முத்துலிங்க ஸ்வாமி என்ற சைவப் பெரியாருடைய தொண்டராக வாழ்ந்தவர் என்று சிலர் கூறுகிறார்கள். கதிர்காமத் தலத்தில் வேறு சில முஸ்லிம் ஞானிகள் வந்து வழிபட்டார்கள் என்று தெரிகிறது. ஹிலுர் அலிஹி என்ற முஸ்லிம் பெரியார் இந்தத் தலத்துக்கு வந்து சில காலம் தங்கி யிருந்தாரென்றும் நாளடைவில் அவர் சிறந்த ஞானியாயினரென்றும் ஒரு செய்தி வழங்கு கிறது.*

கோ. நடேசையர் என்ற அறிஞர் எழுதிய '**கதிர்காமம்**' என்னும் புத்தகத்தில் பின்வரும் செய்தியைக் காணலாம்.

*கதிர்காமம்—குல. சபாநாதன் எழுதியது; ப. 31.

'கதிர்காமத்திற்கு இந்திய முஸ்லிம்களில் அநேகர் வந்து போகிறார்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கையின் ஓரத்தில் ஓர் ஊற்றுண்டென்பதும், அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகியவர் சிரஞ்சீவியாக இருக்கமுடியும் என்பதும் அவர்கள் கொள்கை. அவர்களுள் கிதிர் நபி என்பவர் அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகிச் சிரஞ்சீவியாக இருந்தார் என்றும், அவரே இஸ்லாம் மார்க்கத்தை மாலத்தீவு முதலிய இடங்களில் பரப்பினார் என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஊற்று இருந்த இடம் இப்பொழுது தெரியவில்லை?'

பண்டைக் காலந்தொட்டுக் கதிர்காமத்தில் நடத்தும் திருவிழாக்களில் முஸ்லிம்கள் பந்தம் பிடிக்கும் வழக்கம் இருந்து வந்ததாம். பிற்காலத்தில் இந்த வழக்கம் நின்று விட்டது.

முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் சில பெரிய தலங்களில் முஸ்லிம்களின் தொடர்பும் இருப்பது வியத்தற்குரிய செய்தியாகும். பழனி மலையின் பின்புறத்தில் முஸ்லிம்கள் தொழும் இடம் ஒன்று இருக்கிறது. திருப்பரங்குன்றத்தில் மலையின் அடியில் முருகன் திருக்கோயில் அமைந்திருக்கிறது. மலைக்குமேல் முஸ்லிம்கள் தொழும் கோயில் உண்டு. அதைச் சிக்கந்தர் கோயில் என்பார்கள். "ஸ்ரீஸ்கந்தரே சிக்கந்தர் ஆகிவிட்டார்" என்று முருகன் அடியார் ஒருவர் இதற்குப் பொருள் கூறினார்.

வள்ளியம்மையின் திருக்கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் முத்துலிங்க ஸ்வாமியின் சமாதி இருக்கிறது. அங்கே சமாதியின்மேல் சிவலிங்கத்தை அமைத்திருக்கிறார்கள். அங்கே இருந்த ஒருவரை, "முத்துராமலிங்க ஸ்வாமி யார்?" என்று கேட்டேன். அவர் ஒரு கதையைச் சொன்னார்.

'காஷ்மீரத்திலிருந்து ஒரு பிராமணர் இங்கே வந்தார். அவரையே முத்துலிங்க ஸ்வாமி என்று பிற்காலத்தில்

வழங்கினர். இங்கே முருகன் மிகவும் சக்தியுடையவனுக இருப்பதைக் கண்டு அப் பெருமானை எடுத்துக் கொண்டு தம் ஊருக்குப் போய்விடவேண்டும் என்று நினைத்தார். அவருக்கு மந்திரமும் தந்திரமும் நன்முகத் தெரியும். கதிர்காம முருகனுடைய சக்தியை ஒரு யந்திரத்தில் ஆகர்ஷணம் செய்து வைத்துக் கொண்டார். அதை ஒருவரும் அறியாமல் எடுத்துக்கொண்டு இரவோடு இரவாக ஓடிவிடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார். ஆனல் அதற்குள், முருகனை வெளியேற்றும் அந்த ஸ்வாமி யின் எண்ணத்தை அறிந்த வள்ளியம்மையார், இங்குள்ள சிங்களத் தலைவர்களிடம் கனவிலே வந்து உண்மையைத் தெரிவித்துவிட்டார். வள்ளியம்மையார் சிங்கள வேடர் குலத்திலே உதித்த பெண். இங்கே அவளுக்கும் முருகனுக் கும் கல்யாணம் ஆயிற்று. கனவு கண்ட சிங்களவர் உடனே எழுந்து சென்று முத்துலிங்க ஸ்வாமியைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டார்கள். அவர் தாம் வைத் திருந்த யந்திரத்தைச் சிங்களவர்களிடம் கொடுத்து விட்டார். அந்த யந்திரமே கோயிலில் பெட்டிக்குள் இருக்கிறது. உற்சவ காலங்களில் அதையே யானையின் மேல் ஏற்றி ஊர்வலம் செய்விக்கிறுர்கள். முத்துலிங்க ஸ்வாமி முருகனை எடுத்துச் செல்ல முடியவில்லையே என்று ஏங்கினுர். அவரால் முருகனைப் பிரிந்திருக்க முடிய வில்லை. இந்தத் தலத்திலேயே வாழ்ந்து வந்தார். கடைசி யில் இங்கேயே சமாதி அடைந்தார். தவத்திற் சிறந்தவர் அவர்.

இந்தக் கதையைக் கேட்டேன். கதை அப்படியே நிகழ்ந்திருக்கும் என்று சொல்ல முடியாவிடினும் உண்மை யின் கரு அதில் இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. யந்திரங்களுக்கு மக்களைக் கவரும் ஆற்றல் மிகுதி. பல தலங்களில் தவத்திற் சிறந்த பெரியோர்கள் யந்திரங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறுர்கள். அதன் பயனுக அத்

தலத்தில் உள்ள மூர்த்திகளுக்கு மூர்த்திகரம் மிகுதியாக உண்டாகியிருக்கிறது. பெரிய தலங்களில் யந்திரங்கள் உண்டென்பதை விசாரித்து உணரலாம்.

# 7

# திருவிழாக் காட்சிகள்

**க**திர்காமத் திருக்கோயிலில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெளிவாகத் தெரியாது. ஒருகாலத்தில் இந்தக் கோயிலைப் பூசிக்கும் தொண்டை ஹிந்துக்களே செய்து வந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். சிதம்பர ரகசியம் போலக் கதிர்காம ரகசியமும் இருக்கிறது. உள்ளே மிக விலை உயர்ந்த மாணிக்கத்தாலாகிய முருகன் திருவுருவம் இருக்கிறதென்று சிலர் கூறுகின்றனர். **தக்ஷிண கைலாச புராணம்** என்னும் நூல் இந்தத் தலத்தைப் பற்றி வருணிக்கும்போது, இந்திர நீல மணியினால் செய்த சிங்காதனத்தில் முருகன் எழுந்தருளியிருக்கிறான் என்று தெரிவிக்கிறது. அருணகிரி நாதர் திருப்புகழில்,

**‘கனகமா ணிக்க வடிவனே மிக்க**
**கதிர காமத்தில் உறைவோனே’**

என்று பாடுகிறார்.

இவற்றை யெல்லாம் பார்க்கும்போது இங்கே மிக விலை உயர்ந்த பொருளால் ஆகிய முருகனுடைய திருவுருவம் இருந்திருக்கவேண்டும் என்றே தெரிகிறது. தமிழ் நாட்டில் பல பழைய தலங்களில் இன்னும் விலையுயர்ந்த மணிகளால் ஆகிய லிங்கங்களையும் ஆபரணங்களையும் காணலாம். அவ்வண்ணமே இங்கும் முருகனுடைய திருவுருவம் மிக்க விலையுயர்ந்த மாணிக்கத்தால் அமைந்திருக்க நியாயம் உண்டு.

காட்டுக்கு நடுவே இத்தலம் இருத்தலினால் பக்தி உள்ளவர்கள் தனியே வராமல் கூட்டம் கூட்டமாக வந்து தரிசித்துப் போயினர். மற்றச் சமயத்தினர்கள் இங்கே விலை உயர்ந்த பொருள்கள் இருக்கின்றனவென்று எண்ணி அவற்றைக் கொள்ளையடித்து எடுத்துச் செல்லவும் துணிந்தார்களாம். சில போர்த்துக்கீசியர்கள் இந்தக் கோயிலுக்குக் கொள்ளை யடிப்பதற்காக வந்தபோது, அவர்களுக்கு வழிகாட்டி வந்தவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாம். இதை ஒரு போர்த்துக்கீசியரே எழுதியிருக்கிறார்.*

நம்முடைய நாட்டில் எல்லாவற்றினும் உயர்ந்த பொருள் இறைவனே என்ற கொள்கை இருக்கிறது. அதனால் கடவுளைப் பரம்பொருள் என்று சொல்கிறோம். மற்றப் பொருள்களை அந்தப் பரம்பொருளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று நினைக்கிறோம். ஆதலின் இறைவன் திருக்கோயிலுக்கு விலையுயர்ந்த அணிகளை வழங்கி வழிபடுவது இந்த நாட்டு வழக்கமாகிவிட்டது. முன்பு அரசாண்ட மன்னர்கள் மேலும் மேலும் திருக்கோயில்களுக்குக் கிடைத்தற்கரிய விலையுயர்ந்த அணிகலன்களை அளித்தார்கள். பிற்காலத்தில் பேராசைப் பேய்களும் புறமதத்தினரும் அவற்றைக் கொள்ளையடித்தார்கள் என்ற செய்தியை நம் நாட்டிலும் சில இடங்களில் கேட்கலாம்.

'காட்டுக் கிராமம்' என்ற நாவலை (The Village in the Jungle) லியனார்ட் வுல்ப் (Leonard Woolf) என்பவர் எழுதியிருக்கிறார். இலங்கையில் காட்டினிடையே வாழ்ந்த ஒரு குடும்பத்தைப் பற்றிய கதை அது. அதனிடையே அந்தக் குடும்பத்தினர் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றதாக ஒரு பகுதி வரு

* கதிர்காமம்: குல. சபாநாதன் எழுதியது, ப. 23.

கிறது. கதிர்காமத்தைப் பற்றித் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் இணைத்து அந்தப் பகுதியை ஆசிரியர் எழுதியிருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. அந்தப் பகுதியில் சில இடங்கள் வருமாறு. *

* * *

"அடுத்த நாள் காலையில் அவர்கள் மகாபட்டணத்தை விட்டுச் செல்லவேண்டியிருந்தது, மறுபடியும் காட்டினிடையே பிரயாணம் செய்து துன்புற நேர்ந்தது. இரண்டு நாட்கள் முள் நிறைந்த காட்டினூடே நடக்க வேண்டியிருந்தது; இடையில் வெயிலுக்கு ஒதுங்க நிழலே கிடையாது. வரவர வழி கல்லும் பாறையும் நிறைந்ததாக இருந்தது. அங்கங்கே புதர்களும் அவற்றினிடையே குண்டுக் கற்களும் இருந்தன. மரங்களுக்கிடையே உயர்ந்து நின்ற பாறைகளும் இருந்தன. முதல் நாள் பிற்பகலில் பேரகமக் குன்றத்தை நெடுந் தூரத்திலிருந்து கண்டார்கள். கோயிலுக்கு மேலே மூன்று சிகரங்களை உடையதாக அது நின்றது. அடுத்த நாள் மாலை அவர்கள் குன்றத்தைச் சார்ந்த காட்டை அடைந்தார்கள். அது அடிவாரத்திலிருந்து குன்றின் உச்சி வரையில் படர்ந்திருந்தது.

"மறுபடியும் திடீரென்று காடில்லாத இடம் வந்தது. ஓர் ஆற்றின் கரையை அடைந்தார்கள். கரைகளில் பெரிய மருத மரங்களும் அத்தி மரங்களும் அடர்ந்திருந்தன. வெயில்கால மாகையால் ஆற்றின் நடுவில் கொஞ்சந்தான் நீர் ஓடிக்கொண்டிருந்தது. இரு பக்கங்களிலும் மணற்பரப்பு. ஆற்றில் அங்கங்கே யாத்திரிகர்கள் தங்கள் உடலழுக்கையும் உள்ளத் தழுக்கையும் போக்கிக் கொள்ள நீராடிக் கொண்டிருந்தார்கள். இவர்களும் அவர்களைப் பார்த்து நீராடினார்கள். வெள்ளாடை உடுத்துக் கொண்டு ஆற்றுக்கு அக்கரையை அடைந்து ஊருக்குள் போனார்கள்.

---

* பக்கம், 101 - 107.

"நீளமும் அகலமுமான ஒரு தெருவில் அவர்கள் புகுந்தார்கள். தெருவின் இரு புறங்களிலும் வீடுகளும் மடங்களும் இருந்தன. மடங்கள் யாத்திரிகர்கள் வந்து தங்க வசதியானவை. தெரு முழுவதும் அடியார்கள் நிறைந்திருந்தனர். சிலர் சும்மா நின்று கொண்டும், சிலர் கடைகளில் பண்டங்களை வாங்கிக் கொண்டும், சிலர் கோயிலுக்குப் போய்க் கொண்டும் இருந்தார்கள். கோயிலிலிருந்து ஸ்வாமி வெளியில் எழுந்தருள வேண்டிய சமயம் அது. அங்கே திருவிழா, பதினான்கு தினங்கள் நடக்கும். ஒவ்வொரு நாளும் கடவுள் திருவீதியில் எழுந்தருளுவார். பௌர்ணமியன்று உற்சவத்தின் கடைசி நாள். அன்று மிகவும் விசேஷமாக இறைவன் பவனி நடைபெறும். அதற்கு மறுநாள் கோயில் பூசை செய்யும் கப்புராளை ஆற்றுக்குச் சென்று நீராடுவார். அப்போது அடியார்களெல்லாம் அவருடன் சென்று ஸ்நானம் செய்வார்கள். ஆற்றில் பொற்கத்தியினால் நீரைக் கீறுவார் பூசாரி.

"தெருவின் இரு முனைகளிலும் கோயில்கள் இருந்தன. வட முனையில் இருந்த கோயில் பேரகமத் தெய்யோ (கதிர்காம முருகன்) வினுடையது. தேவாலயம் சிறியது. அதன் ஒரு பக்கத்தில் விமானம் இருந்தது. அதன்மேல் பல தெய்வங்களின் திருவுருவங்கள் அமைந்திருந்தன. ஹிந்துக் கோயில்களில் இப்படிக் கோபுரமும் அதில் சிற்ப உருவங்களும் இருக்கும். கோயிலைச் சுற்றிப் பெரிய முற்றம் இருந்தது. அதைச் சூழச் செங்கல்லால் அமைந்த திருமதில் இருந்தது. மதிலுக்குப் புறம்பே கீழ்த்திசையில் மற்றொரு சிறிய கோயில் இருந்தது. அது கடவுள் திருமணம் செய்து கொண்ட தேவியின் திருக்கோயில் (தேவயானை கோயில்). வீதியின் தென் கோடியில் மற்றொரு கோயில் உண்டு. அது சதுரமான கோயில். குப்பை கூளம் நிறைந்ததாக இருந்தது. அதற்கு முற்றமோ மதிலோ இல்லை. அதைச் சுற்றித் திண்ணை இருந்தது. அதில் கண்ட கண்ட

சாமான்களெல்லாம் கிடந்தன. யாத்திரிகர்கள் அங்கே தூங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கோயிலுக்கு ஒரே ஒரு வாசல். அதில் ஒரு திரை கட்டியிருந்தார்கள். அந்தத் திரையில் கடவுளின் திருவுருவம் இருந்தது. கப்புராளை யரைத் தவிர வேறு யாரும் திரையைத் தாண்டி உள்ளே போக முடியாது. அந்தக் கோயில் கடவுளுடைய காதற் கிழத்தியினுடையது (வள்ளியம்மை திருக்கோயில்).

"இங்கே காட்டினிடையே வாழும் தமிழ்க்கடவுள் யார்? தமிழர்கள் இந்தப் பெரிய கடவுளைக் கந்தசாமி என்று வழங்கினுர்கள். இங்கே வாழும் புத்தர்கள் அக் கடவுளை அறிந்து கொண்டவர்களாகச் சொல்கிறுர்கள். மரங்களிலும் காடுகளிலும் உள்ள பேய் பிசாசுகளை அவர் கள் அறிவார்கள். அவைகளோடு அந்தக் கடவுளும் இருக்கிறுராம். ஒரு காலத்தில் முன்னே சொன்ன பெரிய குன்றத்திலுள்ள மூன்று சிகரங்களில் நடுச் சிகரத்தில் இந்தக் கடவுள் எழுந்தருளி யிருந்தாராம். கடலளவும் பரந்து கிடக்கும் காட்டையும் மலையையும் ஆட்சி புரிந்து வந்தார். அதனுல்தான் உற்சவத்தில் ஒவ்வொரு நாளும் அந்தச் சிகரத்தில் நெருப்புச் சோதி விடுகிறதாம். ஒரு நாள் குன்றத்தின்மேல் அப் பெருமான் வீற்றிருந்து கீழே ஓடிய ஆற்றையும் மரங்களையும் பார்த்தார். ஆற் றுக்கு அக்கரையில் உள்ள சமவெளியில் சென்று தங்க வேண்டுமென்று திருவுள்ளம் பூண்டார். அந்தக் காலத் திலும் அவர் தமிழ்க் கடவுளாக இருந்தார். ஆகவே அந் தப் பக்கம் வந்த தமிழர்களை அழைத்துத் தம்மை ஆற்றின் அக்கரைக்கு எடுத்துச் செல்லும்படி பணித்தார். தமிழர் கள், 'எம்பெருமானே, நாங்களெல்லாம் ஏழைகள். நெடுந் தூரம் காடும் மேடும் கடந்து கடற்கரையிலுள்ள உப்பங் கழியில் உப்பெடுக்கப் போகிறேம். இப்போது இங்கே தங்கினுல் மழை வந்து உப்பைக் கரைத்து விடும். நாங்கள் வந்த காரியம் வீணுகிப் போகும். ஆகையால் எங்கள் காரி

யத்தை முடித்துக் கொண்டு திரும்புகாலில் தேவரீரை எடுத்துச் சென்று ஆற்றுக்கு அக்கரையில் பிரதிஷ்டை செய்வோம்' என்ருர்கள். இப்படிச் சொல்லிவிட்டு அவர் கள் போய் விட்டார்கள். அவர்கள் தம் ஏவலைப் புறக் கணித்ததனால் கடவுளுக்குக் கோபம் மூண்டது. சிறிது நேரம் கழித்துச் சிங்களவர்கள் சிலர் ஒரு கூட்டமாக வந் தார்கள். அவர்களும் உப்பங்கழியில் உப்பெடுக்கத்தான் போய்க் கொண்டிருந்தார்கள். கடவுள் அவர்களை அழைத் துத் தம்மை ஆற்றின் அக்கரைக்கு எடுத்துச் செல்லும்படி சொன்னர். அவர்கள் குன்றத்தின்மேல் ஏறிக் கடவுளை எடுத்துக் கொண்டு கீழிறங்கி ஆற்றைக் கடந்து சென்று அக்கரையில் மரங்களின்கீழ், இப்போது கோயில் உள்ள இடத்தில் வைத்தார்கள். அப்போது கடவுள் இனிமேல் தம்மைத் தமிழர்கள் பூசை செய்யக் கூடாதென்றும், சிங் களவர்களே செய்ய வேண்டு மென்றும் கட்டளையிட்டார். அதனால்தான் இந்தக் கடவுள் தமிழ்த் தெய்வமாக இருந்தா லும், கோயில் ஹிந்துக் கோயி லாக இருந்தாலும் இங்குள்ள பூசகர்கள் பௌத்தர்களும் சிங்களவர்களுமாக இருக்கிருர் கள்.



கோயிலைத் தரிசிக்க வரும் பக்தர்கள்.

"ஆகவே இந்தக் கடவுள் காட்டுத் தெய்வம்; பெரிய பூதகண நாதர்; தக்க முறை யில் அணுகி வழிபட்டால் அருள் செய்வார். கோயிலைச் சுற்றியுள்ள அமாநுஷ்யமான காடு முழுவதும் இவர் ஆணை பரந்திருக்கிறது. பக்தர்கள் இந்தக் கடவுளின்

மேல் ஆணையிடுவார்கள். பொய்யாக ஆணை இட்டால் கடவுள் அவர்களைத் தண்டிப்பார். நோயாளிகளும் மலடிகளும் பேயாற் பிடிக்கப்பட்டவர்களும் இங்கே பிரார்த்தனை செய்வார்கள்.

"அடியார்கள் உற்சவ காலத்தில் கூட்டம் கூட்டமாக வந்து இந்தக் கடவுளை வழிபடுவார்கள். கடவுள் ஒரு மானைக் காதலித்துத் தம் காதலியாக்கிக் கொண்டார். தெருவின் தென் கோடியில் உள்ள கோயிலில் அந்தக் காதலியை இருக்கச் செய்தார். உற்சவத்தில் பதினான்கு நாட்களிலும் ராத்திரியில் கப்புராளைகள் கோயிலுக்குள் சென்று ஒரு பெரிய கறுப்பு ஆடையால் கடவுளை மூடி எடுத்து வருவார்கள். யாரும் அவரைப் பார்க்கக் கூடாது. யானையின் மேல் கடவுளை வைப்பார்கள். அடியார்கள் ஆண்டவர் பெயரைச் சொல்லி அழைப்பார்கள். தங்கள் தலைமேல் கற்பூர தீபம் நிறைந்த பாத்திரங்களை ஏந்திச் செல்வார்கள். ஊர்வலம் வள்ளியம்மை திருக்கோயிலை நோக்கிச் செல்லும். அங்கே கப்புராளைகள் தங்கள் கண்களைக் கட்டிக்கொண்டு கடவுளை யானைமீதிருந்து இறக்கி, மறைத்தபடியே வள்ளியம்மை கோயிலுக்குள் கொண்டு போவார்கள். அடியார்கள் இறைவர் திருநாம கோஷம் செய்வார்கள். பெண்கள் கப்புராளைமாரின் காலில் விழுந்து வணங்குவார்கள். இப்படிச் செய்தால் பிள்ளை இல்லாதவர்களுக்குக் குழந்தை பிறக்கு மென்று நம்பினார்கள். கப்புராளைமார் கடவுளை வள்ளியினிடம் எடுத்துச் சென்று வைத்து விட்டுப் போவார்கள். முரசுகள் முழங்கவும், மணிகள் ஒலிக்கவும், எங்கும் விளக்குகளின் சுடர் ஒளிரவும் அடியார்கள் பாடி ஆடிக் களிப்பார்கள்; கீழே விழுந்து வணங்குவார்கள். மறுபடியும் கப்புராளைமார் கண்களைக் கட்டிக்கொண்டு வள்ளியம்மை கோயிலுக்குள்ளே சென்று, கடவுளை மூடியபடியே எடுத்து வந்து யானையின் மேல் வைப்பார்கள். மறுபடியும் தம்முடைய கோயிலை

நோக்கிக் கடவுள் எழுந்தருளுவார். அடியார்கள் பின் தொடர்வார்கள்."

இவ்வாறு அந்த ஆங்கிலேயர் கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாவை வருணித்திருக்கிறார்.

பல காலமாகவே கதிர்காமம் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதும், மக்கள் இங்கே வந்து வழிபட்டுத் தம் குறை தீர்ந்தார்கள் என்பதும் இந்த வருணனையினால் உணர வேண்டிய செய்திகளாகும்.

மாணிக்கத் திருவுருவ முடையவன் இங்கே எழுந்தருளிய முருகன் என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், ஒரு காலத்தில் யாவரும் கண்டு வழிபடும் அற்புதத் திருவுருவம் ஒன்றை உடையவனாகி முருகன் இங்கே எழுந்தருளியிருந்தான் என்று நம்ப இடமுண்டு,

## 8

## கல்யாண மடம்

தெய்வயானை அம்மை கோயிலுக்கு எதிரே உள்ளதைக் கல்யாண மடம் என்று சொல்கிறார்கள். மாணிக்க கங்கைக் கரையில் சமாதி கொண்டிருக்கும் முத்துலிங்க ஸ்வாமி இந்தியாவிலிருந்து வந்தவர். அவருடைய இயற் பெயர் கல்யாணகிரி என்பது. அவர் இங்கே வந்து தங்கித் தவம் புரிந்தார். அவர் தங்கியிருந்த இடமே **கல்யாண மடம்** ஆகும்.

அவர் தம்முடைய தவத்தாலும் அன்பினாலும் அங்கே வந்த அடியார்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். அக்காலத்து அரசனுடைய உதவியைப் பெற்றுத் திருக்கோயிலை அவர் செப்பஞ் செய்தார் என்று சொல்வர். இப்போதுள்ள தெய்வயானை அம்மை கோயிலையும் வள்ளியம்மை கோயிலையும் இவர்தாம் கட்டுவித்தாராம்.

முத்துலிங்க ஸ்வாமியின் காலத்துக்குப் பிறகு கல்யாண மடத்தில் ஒருவர்பின் ஒருவராக மடாதிபதிகள் வந்து அந்த மடத்தின் ஆட்சியை நடத்தி வந்தார்கள். முத்துலிங்க ஸ்வாமிக்கு அடுத்தபடி இந்த மடத்தில் எழுந்தருளியிருந்தவர் ஜயசிங்ககிரி ஸ்வாமிகள். அவர் காலத்தில் வட இந்தியாவிலிருந்து ஓர் அரசன் கதிர்காம வேலனைத் தரிசிக்க வந்தான். மக்கள் பலர் இந்தத் தலத்திற்கு வந்து வழிபட்டுத் தங்கள் குறைகளெல்லாம் நீங்கப் பெறுகின்றனர் என்பதைக் கேள்வியுற்றே வந்தான். அவனுக்கும் ஒரு பெருங்குறை இருந்தது. மக்கட்பேறு இல்லாமல் வருந்தினன் அவன். கதிர்காமத் தலப் பெருமையைக் கேட்டு இங்கே தன் குறை நீங்கப் பெறலாமென்று வந்தான். இங்கே சில நாட்கள் தங்கி ஜயசிங்ககிரி ஸ்வாமிகளையும் பணிந்தான். "முருகா, உன்னுடைய திருவருளால் எனக்குக் குழந்தை பிறக்குமானல் இந்தத் தலத்தில் உன்னுடைய திருப்பணி செய்வதற்கென்றே விட்டுவிடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டான். பின்பு தன் ஊருக்குப் போனன்.

அப்பால் அவனுக்கு ஒரு பெண் பிறந்தாள். அவளுக்குப் பாலசுந்தரி என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அரசனுக்குத் தான் செய்துகொண்ட பிரார்த்தனை மறந்துபோய் விட்டது. ஆயினும் கதிர்காம வேலனுடைய திருவுள்ளம் அப்பெண்மணியைத் தன் திருத்தொண்டில் ஈடுபடுத்த வேண்டுமென்றிருந்தது. ஆதலின் அரசனுடைய கனவிலே முருகன் எழுந்தருளி அவனது பிரார்த்தனையை நிறைவேற்றும்படி பணித்தான். செய்து கொண்ட வேண்டுதலை நிறைவேற்ருவிட்டால் தீங்கு உண்டாகும் என்பதையும் அரசன் உணர்ந்தான். இறைவன் கட்டளைப்படியே தன் அழகிய பெண்ணைச் சில தோழிகளையும் துணையாகக் கூட்டிக் கதிர்காமத்துக்கு அனுப்பினன். அது முதல் பாலசுந்தரி கதிர்காம முருகனுடைய

திருக்கோயில் தொண்டு செய்துகொண்டு வாழ்ந்து வரலானாள்.

கண்டியில் இருந்து அரசாண்ட விக்கிரம ராஜசிங்கன் என்னும் அரசன் ஒரு முறை கதிர்காமத்துக்கு வந்தான். வடிவேற் பெருமானைத் தரிசித்தான். திருக்கோயிலில் தொண்டுபூண்டு நிற்கும் பாலசுந்தரியின் அழகுருவம் அவன் கண்ணிலும் கருத்திலும் பதிந்தது. அவளைப் பற்றிய செய்திகளை விசாரித்து அறிந்துகொண்டான். அரச குலத்தில் பிறந்தவள் என்று தெரிந்தபோது அவனுக்கு அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ளவேண்டு மென்ற விருப்பம் உண்டாயிற்று. 'அரசருக்கு மகளாகப் பிறந்து அரண்மனையில் வளர்ந்த இந்த அழகிக்கு இந்தக் கோயிலில் துறவியைப் போல இருந்து வாழ்வது ஏற்ற தல்ல. என்னுடைய அரண்மனை அந்தப்புரத்தை அலங் கரிக்கும் அற்புத மாணிக்கமாக இவள் விளங்குவாள்' என்று அவன் எண்ணினான்.

அவன் கண்டிக்குச் சென்றபிறகு நல்ல பரிசில்களுடன் சிலரை அனுப்பிப் பாலசுந்தரியிடம் தன் கருத்தைக் குறிப் பாகத் தெரிவிக்கச் சொன்னான். அவர்கள் வந்து அப்படியே செய்தார்கள். "எங்கள் நாட்டில் அரசகுமாரர்களுக்குப் பஞ்சம் இல்லை. நான் அரசியாக வேண்டுமானால் எத்த னையோ பேர்கள் என்னை மணந்து முடி சூட்டக் காத்திருக் கிறார்கள். அதனால் என்ன பயன்? நான் இங்கே குமார னுடைய அருள் ராஜ்யத்திலே வாழ்கிறேன்?" என்று அவள் கூறினாள்.

வந்தவர்கள், "நீங்கள் அரசியானாலும் இந்தக் கோயி லுக்கு அடிக்கடி வந்து தரிசித்துக் கொள்ளலாம். எங்கள் மன்னர் திருவுளங் கொண்டால் இந்த ஊரிலேயே ஓர் அரண்மனையை வகுத்து உங்களை அதில் இருக்கும்படி செய்வார்; அவரும் உங்களோடு வந்து இங்கே தங்குவார்" என்றார்கள்.

பாலசுந்தரி இணங்கவில்லை. கதிர்காம நாதனுடைய திருவடிக் கமலங்களிலே படிந்த வண்டுபோல இருந்தது அவளுடைய மனம். அதை மாற்றுவது எளிதான செயலா? முருகனே வலிந்து ஆட்கொண்ட பெரும்பேறு அவளுக்கு இருக்கும்போது அவள் யாருக்கு அஞ்ச வேண்டும்? யாரை மதிக்க வேண்டும்?

விக்கிரம ராஜசிங்கன் தன் விருப்பம் நிறைவேறாமல் போகவே வேறு வகையில் பாலசுந்தரியைக் கைப் பற்றி வர ஏற்பாடு செய்தான். சில படை வீரர்களைக் கதிர்காமத்துக்கு அனுப்பிப் பாலசுந்தரியைக் கொண்டு வரும்படி பணித்தான்.

இறைவன் அருட் பலத்தைப் பெற்ற பாலசுந்தரிக்கு முன் அந்தப் படைப்பலம் என்ன செய்யும்? வீரர்கள் வந்து மிரட்டினார்கள்; தூக்கிக் கொண்டு போவதாக அச்சுறுத்தினார்கள். பாலசுந்தரி சிறிதும் அஞ்சவில்லை. தரிசனத்துக்காக வந்த பக்தர்கள் அப்பெருமாட்டிக்கு உரிய பாதுகாப்பை அளிக்க முன்வந்தனர். ஜயசிங்ககிரி ஸ்வாமிகளும் உதவி செய்ய நின்றார். வந்த படை வீரர்கள் இங்கே உள்ள மக்களின் எதிர்ப்பைக் கண்டு மீண்டும் கண்டிக்கே போய்விட்டார்கள். பாலசுந்தரி எட்டாப் பழம் என்பதை அரசன் அறிந்து அவளுக்காகக் கொட்டாவி விடுவதை நிறுத்திக் கொண்டான்.

பாலசுந்தரி பல ஆண்டுகள் கதிர்காமத்திலே இருந்து தொண்டாற்றினாள். தொண்டு கிழவியாகும் வரையில் தொண்டுபுரியும் பேறு அவளுக்குக் கிடைத்தது. பிறகு இறைவன் திருவடியிலே கலந்தாள். 19—ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாலசுந்தரியின் மறைவு நேர்ந்ததென்று சொல்வார்கள். 'இவளை எங்ஙனமாயினும் இசையச் செய்தல் வேண்டுமெனக் கருதிய அரசன், அரண்மனைக்கு இவளை அழைத்துவரும்படி தனது படைவீரரை அனுப்பினான். என் செய்வாள் பாவம்! திக்கற்றவர்க்குத் தெய்வ

மன்றோ துணை? அடியாரிடத்து அஞ்சுமுகம் தோன்றினால் ஆறுமுகம் தோன்றாதிருக்குமா? இங்ஙனம் கட்டளையிட்ட அரசனையே இவளுடைய பழி சூழ்ந்தமையால் ஆங்கில அரசினர் அவனைச் சிறைப்படுத்தினர். முருகன் திருவருளால் தப்பிய அரச குமாரி கிழவிப் பருவம் வரையும் இருந்து தொண்டாற்றி, கி. பி. 1876—ஆம் ஆண்டளவில் இறைவன் திருவடி நீழலை அடைந்தனள்......இவ்வம்மையாருடைய சமாதி, கல்யாண மடத்துக்கு அருகில் உள்ள தோட்டத்தில் பால்குடி பாபாவினுடைய சமாதிக்கு அருகில் உள்ளது' என்று குல. சபாநாதன் தாம் எழுதிய "**கதிர்காமம்**" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

* * *

கஜபுரி ஸ்வாமிகள் என்ற அன்பர் ஒருவர் இளமைப் பருவத்திலே வடநாட்டிலிருந்து இங்கே வந்தார். கதிர்காம நாதனைக் கண்டு காதல் மீதூர்ந்து இங்கே தங்கினார். கல்யாண மடத்தில் இருந்தார். இயற்கையாகவே வைராக்கியம் பூண்ட அவர் முருகனுடைய சந்நிதானத்திற்கு வந்து பெற்ற உணர்ச்சியால் பின்னும் விருப்பு வெறுப்பற்ற நிலையை அடைந்தார். மடத்தில் இருந்து அங்கே வரும் கூட்டத்தினருடைய ஆரவாரத்தினிடையே வாழ விரும்பவில்லை. தனியே இருந்து தவம்புரிய வேண்டும் என்ற விருப்பம் அவருக்கு எழுந்தது. அவ்வாறே அவர் காட்டுக்குள் சென்று தவம் புரியத் தொடங்கினார். ஒரு வருஷம், இரண்டு வருஷம் அல்ல; 50 ஆண்டுகள் தவம் புரிந்தார்.

அப்போது காஷ்மீரத்திலிருந்து ஒரு துறவி தென்னாட்டுத் தல தரிசனத்துக்காகப் புறப்பட்டார். சுரராஜபுரி என்பது அவருடைய பெயர். அவர் இராமேசுவரம் சென்றார். அப்போது அவருடைய கனவில் இறைவன் எழுந்தருளி, "இலங்கையில் உள்ள சிவனடிபாத மலைக்கு வரவேண்டும்" என்று கட்டளை யிட்டான். அப்படியே அந்தத் துறவி சிவனடிபாத மென்னும் சமனொளிபாத

மலையை (Adam's Peak) அடைந்தார். அது எல்லாச் சமயத்தினரும் வழிபடும் புண்ணியத் தலம்.

அங்கே சில நாள் தங்கியிருந்தபோது மீட்டும் அவருக்குக் கனவின் மூலம் இறைவன் கட்டளை ஒன்று பிறந்தது. பல காலமாகக் காட்டிலிருந்து தவம் புரிந்துவரும் கஜபுரி ஸ்வாமிகளைக் கண்டு கதிர்காமத்துக்கு அழைத்துச் செல்லவேண்டு மென்பதே அந்தக் கட்டளை. சுரராஜபுரி முனிவர் காட்டுக்குள் சென்று தேடினார். ஐம்பது ஆண்டுகளாகப் பொறிபுலன்களை அடக்கித் தவம் புரிந்து வந்த கஜபுரியை அவர் தரிசித்தார். காலில் விழுந்து பணிந்தார். கண்ணீர் வார நின்று துதித்தார். இறைவன் இட்ட கட்டளையைத் தெரிவித்தார். மீண்டும் மக்கள் நடமாடும் இடத்திலே வந்து வாழ்வதைக் கஜபுரி ஸ்வாமிகள் விரும்பவில்லை. ஆயினும் இறைவனுடைய ஆணையை மறுக்க வகையின்றி அவர் சுரராஜபுரியுடன் கதிர்காமத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அவர் கதிர்காமத்தில் கல்யாணமடத்தில் வந்து தங்கினார். அந்த மடத்தின் பெருமை அவரால் அதிகமாயிற்று. பல காலமாகக் காட்டுக் கனிகளையும் கிழங்குகளையும் உண்டு பழகிய அவருக்கு அரிசிச் சோறு ஒத்துக்கொள்ளவில்லை. ஆதலினால் பால்மாத்திரம் உண்டு வந்தார். அதனால் அவரை யாரும் **பால்குடி பாபா** என்று அழைக்கத் தொடங்கினார்.

சுரராஜபுரியும் பால்குடி பாபாவுடன் கல்யாண மடத்திலே தங்கிவிட்டார். பல மக்கள் பால்குடி பாபாவைத் தரிசித்து நன்மை அடைந்தனர். இறைவனுடைய கட்டளையால் அவர் கதிர்காமத்தில் வந்து தங்கியிருந்தாலும் ஏகாந்தத்தின் இனிமையை நுகர்ந்த அவருக்குப் பழையபடி மக்கள் கண்படாத மோனச் சூழலில் சென்று தங்க வேண்டுமென்ற அவா இருந்துகொண்டிருந்தது. அதை முற்றும் நிறைவேற்றிக்கொள்ள முடியாவிட்டாலும்

அவ்வப்போது காட்டுக்குச் சென்று சில காலம் இருந்து விட்டு வருவார். கடைசியில் 1898–ஆம் வருஷம் அவர் கொழும்பு நகரம் போயிருந்தார். அங்கேயே அவர் இறைவன் அடிநிழலை எய்தினர். அங்கிருந்து அவருடைய திருமேனியை எடுத்து வந்து கதிர்காமத்தில் சமாதி செய்தார்கள். பால்குடி பாபா சமாதிக்கு இன்றும் பூசை முதலியன நடைபெற்று வருகின்றன.

அவருக்குப்பின் கல்யாண மடத்தில் பல துறவிகள் தலைமை பூண்டனர். இப்போது மலையாளத்திலிருந்து வந்த ஒருவர் மடாதிபதியாக இருப்பதாகத் தெரிகிறது.

# 9

# பிற செய்திகள்

## செல்லக் கதிர்காமம்

கதிர்காமத்திற்கு மூன்று மைல் தூரத்தில் **செல்லக் கதிர்காமம்** என்னும் இடம் இருக்கிறது. நான் அங்கே போக முடியவில்லை. அத்தலத்துக்கு அருகிலும் மாணிக்க கங்கை வருகிறதாம். அதன் கரையில் **மாணிக்கப் பிள்ளையார்** என்ற திருநாமத்தோடு விநாயகர் எழுந்தருளியிருக்கிறார். அப்பால் செல்லக் கதிர்காமமாகிய மலை இருக்கிறது. அதைச் **சுவாமி மலை** என்றும் **பழைய கதிர்காமம்** என்றும் வழங்குகிறார்கள். ஏறுதற்குச் சற்றுக் கடினமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்த மலையின்மேல் கோயில் ஒன்றும் இல்லை. மேலே சென்று அவ்விடத்தையே முருகன் உறையும் இடமாக வழிபடுவது அன்பர்களுடைய வழக்கம் என்பர். கதிரை மலை, கதிர்காம வெற்பு, கதிர்காம மலை என்று சொல்லும் பெயர்களை உடையது இந்தச் செல்லக் கதிர்காமமே ஆகும். முருகவேளும் வள்ளியெம் பெருமாட்டியும் ஏகாந்தத்திலிருந்து இன்புற்ற இடம் இத் திருத்தலம் என்று சிலர் சொல்கிறார்கள். செல்லக் கதிர்

காமம் என்ற திருநாமம் இந்த அருமைப் பாட்டை நினைந்து வந்ததுபோலும்.

## புகழேந்திப் புலவர் பாட்டு

கதிர்காமத்துக்கு ஒரு சமயம் புகழேந்திப் புலவர் வந்திருந்தார். அப்போது இங்கே தரிசனம் செய்து கொண்டிருக்கையில் ஒரு மயில் பாம்பு ஒன்றைக் கவ்விக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அதைக் கொத்திக் கிழித்து நாசமாக்கிவிடும் என்று தோன்றியது. புகழேந்திப் புலவருக்கு அந்தப் பாம்பினிடம் கருணை பிறந்தது. தமிழ் நாட்டில் அன்பர்கள் நாகத்தைக் கொல்ல அஞ்சுவார்கள். நாகப் பாம்பைச் சொப்பனத்தில் கண்டால், முருகனுக்குப் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். இந்த நினைவு காரணமாகப் புகழேந்திக்கு மயிலால் வருந்திய பாம்பினிடம் இரக்கம் எழுந்தது போலும். அந்த மயிலிடம், "மயிலே, நீ பாம்பை விட்டுவிடு" என்று விண்ணப்பம் செய்து கொண்டார். அவர் புலவராதலின் நம்மைப்போல வெறும் பேச்சாகவா சொல்வார்? பாட்டாகவே அந்த வேண்டுகோளை விடுத்தார்.

கதிர்காம வேலனிடம் மயல் பூண்ட பெண் ஒருத்தி சொல்வதாக அந்தப் பாட்டைப் பாடினார். "அடடா! இந்தப் பாம்பை நீ பற்றிக் கொண்டாயே! எனக்கு இதனால் ஓர் உபகாரம் ஆகவேண்டியிருக்கிறதே. இறைவனுடைய காதலால் வெம்பும் எனக்கு மாலைக் காலம் வந்தால் பெரிய ஆபத்து. சந்திரோதயம் ஆகிவிட்டால் சொல்லவே வேண்டாம். போதாக் குறைக்கு என்னைப் பெற்ற தாயும் வளர்த்தவர்களும் என்னை மிரட்டும் மிரட்டல்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர்களுக்கு முன்னே என்னை வெதுப்பி வருத்தும் சந்திரன் உதயமானால், இந்தப் பாம்பைக் கொண்டு அந்தப் பாழும் திங்களை விழுங்கிவிடச் சொல்லலாம் என்றல்லவோ

நினைத்தேன்? நீ இதை வாயிலே கவ்விக் கொண்டாயே! தீயர்களுடைய கூட்டத்தைச் சீறும் வடிவேலை எடுத்த முருகனாகிய கதிர்காமப் பெருமானுக்கு வாகனமாகிய மயிற் பெருமானே! உன்னை வேண்டிக் கொள்கிறேன். இந்த நாகப் பாம்பு எனக்கு உபகாரம் பண்ணக்கூடியது. அதை வருத்தலாமா?" என்ற பொருள் அமையும்படி ஒரு வெண்பா வெளியாயிற்று.

**தாயரவை முன்வருத்தும் சந்த்ரோ தயந்தனக்குன்**
**வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவை**
**சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமாள்**
**ஏறு மயிற்பெருமா னே.**

[தாயர் அவை – தாய்மார்களின் கூட்டம். பெற்றெடுத்த தாயும் ஐந்து வகைச் செவிலித் தாயரும் இருத்தலால் அவை என்றார். வாய் அரவை. தீயர் அவை—தீயவர்களாகிய அசுரர் கூட்டத்தை. சீறும் அயில் பெருமாள்; அயில்—வேல். மயிற் பெருமாளே என்பது மயிலையே விளித்தபடி. குதிரை நம்பிரான் என்று வாகனங்களையும் மரியாதையுடன் சொல்லும் வழக்குப் பற்றி, மயிற்பெருமான் என்றார்.]

## அற்புதங்கள்

இந்தத் தலத்தில் பலபல அற்புதங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன என்று சொல்வார்கள். சரியாகப் பேச வராதவர்கள் கதிர்காம வேலனுடைய தரிசனத்தால் நன்றாகப் பேசியதுண்டு. கண் ஒளி மழுங்கி இத் தலத்துக்கு வந்து முருகனுடைய அருளால் பார்வை பெற்று இன்புற்றவர் சிலர். பல காலம் மக்கட்பேறே இன்றி வருந்தி இங்கே வந்து பணிந்தமையால் குழந்தை பெற்றவர்கள் பலர்.

பழங்காலத்தில் கதிர்காமத்துக்குப் போகும் வழி செவ்வையாக இருக்கவில்லை. காட்டு வழியே போக வேண்டும். அக்காலங்களில் காட்டு மிருகங்கள் எதிர்ப்

பட்டால் இறைவன் திருநாமத்தை அன்பர்கள் சொன்னவுடன் அவை ஓடிவிடுமாம். அந்த ஒலியைக் கேட்டுக் கேட்டு, "இந்த ஒலி வரும் இடத்தை ஒன்றும் செய்யக் கூடாது" என்ற எண்ணம் அம் மிருகங்களுக்கு வந்திருக்க வேண்டும்.

இத்தகைய அற்புதங்கள் இங்கே நிகழ்வதைச் சுப்பிரமணிய க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர் பாடுகிறார்:

மாணிக்க நிறைகங்கை ஆடிஉன் னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாய்ஊமர் பாடவும் குருடர்கண் பார்த்திடவும்
மலடிகள் மைந்தர்பெறவும்
காணிற் குமாரவே லாவென்னும் அன்பரைக்
கரடிபுலி யானைசிங்கம்
காலிற் பணிந்தஞ்சி ஓடவும் கந்தனே
கண்கண்ட தெய்வமெனவே
ஆணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினுன்
அடியேனை ஆண்டுகொண்டென்
ஆகத்தில் வந்தபிணி தீர்ந்திடவும் முன்நிற்கும்
ஆறுமுக மெய்த்தெய்வமே!
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ!
செங்கீரை ஆடியருளே;
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே!
செங்கீரை ஆடியருளே.

### பிற பாடல்கள்

இத்தல சம்பந்தமாகத் தமிழ் நாட்டு அன்பர்களும் இலங்கை அன்பர்களும் பாடிய பாடல்கள் பல. அருணகிரி நாதப் பெருமான் பாடிய திருப்புகழ்ப் பாக்கள் பல உண்டு. கதிர்காமத் தலத்தைப்பற்றி அவர் வாக்கில் வந்த செய்திகள் வருமாறு:

1. இத்தலத்தில் பழங் காலத்தில் வனவேடர்கள் முருகவேளைப் பூசை செய்து வழிபட்டனர்.

**வனமுறை வேடன் அருளிய பூசை**
**மகிழ்கதிர் காமம்—உடையோனே!**

2. கதிர்காமம் ஈழநாடாகிய இலங்கையில் தென் திசையிலே இயற்கை வளம் நிறைந்த சூழலில் இருக்கிறது.

**கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்**
**கனிகள்பீ றிப்புசித்—தமராடிக்**
**கதலி சூழ் தெற்றிசைப் பயிலுமீ ழத்தினிற்**
**கதிரகா மக்கிரிப் பெருமானே!**

3. இங்கே ஆறும் அருவியும் உண்டு.

**கலக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்கீத**
**கதிர் காம மூதூரில்—இளையோனே!**
**கடகட அருவிகள் தயவரி அதிர்கதிர்**
**காமத் தரங்க—மலைவீரா!**
**மணிதரளம் வீசி அணியருவி சூழ**
**மருவு கதிர்காமப்—பெருமாள்காண்.**

4. கதிர்காம வேலன் மாணிக்கத் திருவுருவுடையவன்.

**கனகமா ணிக்க வடிவனே மிக்க**
**கதிரகா மத்தில் — உறைவோனே!**

3. கதிர்காமத்தில் மலை இருக்கிறது, (செல்லக் கதிர் காமம்.)

**கதிரகாம வெற்பில் — உறைவோனே!**
**கதிர காமத் தரங்க — மலைவீரா!**
**கதிரகா மக்கிரிப் — பெருமானே!**

இத்தலத்தைப் பற்றி முற்காலத்திலும் பிற்காலத்தி லும் இயற்றப்பெற்ற கலம்பகம், பள்ளு, மாலை, காதல், திருப்பள்ளியெழுச்சி, பதிகம், பிள்ளைத் தமிழ், நான்மணி

மாலை முதலிய பிரபந்தங்களும், தனிப்பாடல்களும், சில கீர்த்தனங்களும் இருக்கின்றன.

இத்தலத்தின் பெருமையை எடுத்துரைக்கும் புத்தகங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் பல அன்பர்கள் எழுதியிருக்கிறார்கள். அவற்றுள்ளே பல வகையிலும் சிறப்புடையதாகி விளங்குவது, என்னுடைய நண்பரும் சிறந்த ஆராய்ச்சியாளரும் தமிழ் அறிஞருமாகிய திரு **குல. சபாநாதன்** எழுதிய **'கதிர்காமம்'** என்ற புத்தகம். இலங்கையின் புராதன சைவாலயங்கள் என்ற தொடரில் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.*

# 10

## முடிவுரை

**வா**க்கு மனம் கடந்த வள்ளலாகிய இறைவன், தன்னை வழிபடும் மக்களின்பொருட்டுத் திருவுருவமும் திருநாமமும் உடையவனாக எழுந்தருளினான். அவன் அருளே கண்ணாகக் காணும் பெரியோர்கள் அவனுடைய திருக்கோலத்தைத் தரிசித்து, மற்ற மக்களும் தெரிந்துகொள்ளும்படி அவன் திருவுருவம் இத்தகையது என்று தெரிவித்தருளினர். அருட்பெருஞ் செல்வர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தில் கண்ட கோலங்கள் பலவாதலினால், கடவுளுக்குரிய திருவுருவங்களும் பலவாயின. எல்லா வடிவங்களும் இறைவனுடைய அருளை நினைப்பதற்குரிய அடையாளங்களாய், தம்மை வழிபட்டோர்க்கு உள்ள நெகிழ்ச்சியையும் தூய்மையையும் துன்ப நீக்கத்தையும் அருளி, ஞானமும் இன்பமும் பெறும் கருவிகளாக உதவுகின்றன. ஆதலின் இந்த நாட்டிலே தோன்றிய பெரியோர்கள் பலரும், கடவுளுடைய திருநாமத்தையும் திருவுருவத்தையும் போற்றி வழிபட்டனர். முனிவரும் ஞானியரும் அன்பரும் திருக்

* புத்தகம் கிடைக்கும் இடம்: தனலக்ஷ்மி புத்தக சாலை, சுன்னாகம், இலங்கை.

கோயில் அமைத்துக் கடவுளின் திருவுருவங்களை நிறுவிப் பூசித்தனர். அவை அங்கங்கே மக்கள் வழிபட்டு நன்மை பெறும் தலங்களாக விளங்குகின்றன.

தமிழ் நாட்டில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பல பாடல்களைப் பாடினர். அரசர்களும் தம் செல்வத்தைப் பயன்படுத்த மிகச் சிறந்த வழி, திருக்கோயிலை அமைத்தலும் பாதுகாத்தலும் என்பதை உணர்ந்து அவற்றைச் செய்தார்கள். இவற்ருல் தமிழ் நாடு எங்கணும் திருக்கோயில்கள் எழுந்தன. "ஊராரேனோர் தேவ குலம்", "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பன போன்ற மொழிகளைத் தமிழிலேதான் காண முடியும். ஊர் தோறும் ஆலயங்கள் இருப்பது தமிழ் நாட்டிற்கே சிறப்பியல்பு.

இலங்கையிலும் தமிழர் குடியேறினர். அங்கும் தலங்கள் சில சில எழுந்தன. முருகவேளுக்குரிய தலங்களில் கதிர்காமம் மிக மிகச் சிறந்தது. அங்கே ஆண்டு தோறும் சென்று வழிபடும் அடியார் பலர். போக்குவரத்து வசதிகள் இல்லாத பழங் காலத்தில் கூட்டம் கூட்டமாக மக்கள் இத்தலத்துக்குச் சென்று வழிபட்டார்கள். அப்போது சென்ற மக்களின் தொகை அதிகம்; அவர்களுடைய பக்தியும் நம்பிக்கையும் அதிகம்; அதனுல் அவர்கள் அடைந்த பயனும் அதிகம்.

தமிழர்களுடைய பக்தி எத்துணை சிறப்பானது என்பதைத் தெரிந்து கொள்ள, கடல் கடந்து, காடு கடந்து, கல்லும் முள்ளும் கடந்து, வன விலங்குகளுக்கும் அஞ்சாமல் கதிர்காமத்துக்கு அவர்கள் சென்று வழிபட்டார்கள் என்ற செய்தி ஒன்றே போதும். இந்த அன்பு நெறிதான் தமிழ் நாட்டினரைக் கலை, இலக்கியம், அருள் ஆகிய துறைகளிலே ஈடுபடும்படி செய்கிறது. இந்த நிலை தமிழ் நாட்டில் மங்கி மறைந்தால் தமிழ்ப் பண்பே மறைந்து போகும்;

தமிழ் நாடே இல்லையாகி விடும். மங்கும்படி முருகன் விடமாட்டான் என்பது உறுதி.

கதிர்காமம் இயற்கை எழில் நிறைந்த முருகுச் சூழல். பல காலமாக அன்பர்கள் போற்றி வழிபட்ட ஆத்ம சக்தி நிலையம். இன்னது இருக்கிறது என்று அறியாமல் இருந்தாலும் சிரமம் பாராது தொண்டர் குழாம் வந்து வழிபடும் மறைக் கோயில். முருகனுடைய அற்புதத் திருவருளைப் பெறுவதற்கு ஏற்ற பரம ரகசிய மாளிகை. காலத்தினால் அழியாத நம்பிக்கை யென்னும் அடிப்படையின் மேல், அன்பர்கள் அன்பாகிய கால்களையெழுப்பி உணர்ச்சி யென்னும் விதானம் அமைத்துக் கருத்து உலகத்தில் ஓங்க வைத்த மாணிக்க பீடம். புகழ்ப் பாமாலைகளைப் புலவர் வணங்கி மகிழ்ந்த அலங்கார மண்டபம்.

இந்தத் திருத்தலத்தை வழிபடும் வாய்ப்புக் கிடைக்கும் படிச் செய்த என் நல்லூழுக்கு நன்றி பாராட்டுகிறேன்.

**ஈழமெனும் தீவகத்தில் தென்பகுதி யினிற்காட்டின்**
**இடையே வேடர்**
**வாழுமிடந் தனிற்றூய மாணிக்க கங்கைநதி**
**வளத்தீரத்தில்**
**ஏழுபிறவிக்கடலை ஏறவிடுந் தெப்பமாம்**
**இருதாள் கொண்டு**
**சூழுமடியார்வினையைத்தீர்த்தருள்வான்கதிர்காமச்**
**சோதி வேலன்.**

# கதிர்காமத் திருப்புகழ்ப் பாடல்கள்*

அருணகிரி நாதர் திருவாய் மலர்ந்தருளியவை

## 1

அலகின் மாறு மாறாத கலதி பூத வேதாளி
        அடைவில் ஞாளி கோமாளி        அறமியா
அழிவு கோளி நாணாது புழுகு பூசி வாழ்மாதர்
        அருளி லாத தோள்தோய        மருளாகிப்
பலக லாக ரமேரு மலைக ராச லாவீசு
        பருவ மேக மேதாரு        எனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி ஓயாத
        பரிசில் தேடி மாயாத        படிபாராய்
இலகு வேலை நீள்வாடை எரிகொள் வேலை மாசூரில்
        எறியும் வேலை மாறாத        திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
        இறைவி கான மால்வேடர்        சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
        கதிர காம மூதூரில்        இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
        கருணை மேரு வேதேவர்        பெருமானே!

## 2

உடுக்கத்துகில் வேணும் நீள்பசி
        அவிக்கக்கன பானம் வேணும் நல்
        ஒளிக்குப்புனல் ஆடை வேணும்மெய் உறுநோயை

---

* பலகாலம் உழைத்துத் தேடித் தொகுத்துத் திருப்புகழை வெளியிட்ட பெரியார் வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய உபகாரத்தையும், அவர் வெளியிட்ட நூலை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளியிட்டதன்றி, இப்போது உரையுடன் வெளியிட்டுவரும் தணிகை மணி ஸ்ரீ. வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் உபகாரத்தையும் பாராட்ட வேண்டியது தமிழர் கடமை.

ஒழிக்கப்பரி காரம் வேணும்உள்
இருக்கச்சிறு நாரி வேணும்ஒர்
படுக்கத்தனி வீடு வேணும்இவ் வகையாவும்

கிடைத்துக்குக வாசி யாகிய
மயக்கக்கடல் ஆடி நீடிய
வினைக்குப்பரி பால னாய்உயிர் அவமேபோம்

க்ருபைச்சித்தமும் ஞான போதமும்
அழைத்துத்தர வேணும் ஊழ்பவ
கிரிக்குட்சுழல் வேலை ஆனவ தொருநாளே

குடக்குச்சில தூதர் தேடுக
வடக்குச்சில தூதர் தேடுக
குணக்குச்சில தூதர் தேடுக எனமேவிக்

குறிப்பிற்குறி காணும் மாருதி
இனித்தெற்கொரு தூது போவது
குறிப்பிற்குறி போன போதிலும் வரலாமோ

அடிக்குத்திர கார ராகிய
அரக்கர்க்கிளை யாத நிரனும்
அலைக்கப்புறம் மேவி மாதுறு வனமேசென்

றருட்பொற்றிரு வாழி மோதிரம்
அளித்துற்றவர் மேல்ம னோகரம்
அளித்துக்கதிர் காமம் மேவிய பெருமாளே!

## 3

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்குள் உறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே

கதிர காம வெற்பில் உறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூன்நி மிர்த்த பெருமானே!

## 4

கடகட கருவிகள் தபலங ரதிர்கதிர்
காமத் தரங்கம் மலேவீரா
கனகத தககுலி புணர்இத குணகுக
காமத் தனஞ்சம் புயஞேட
வட்கிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலன்என
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அட்லிஇ ருடிஅபி நவகும ரிஅடிமை
யாய்அப் புனம்சென் றயர்வோனே
அயிலவ சமுட்ன ததிதிரி தருகவி
ஆளப் புயங்கொண் டருள்வோனே
இட்மொரு மரகத மயில்மிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினும் மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமானே!

## 5

சமரமுக வேல்ஒத்த விழிபுரள வார்இட்ட
தனம்அசைய வீதிக்குள் மயில்போல்உ லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்ரு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ருருக்கு மனுமரண மாயைக்கும்
உரியவர்ம காதத்தை எனுமாய மாதரார்

ஒளிரமணி பீடத்தில் அமடுபடு வேனுக்கும்
உனதருள்க்ரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி அநுபவைப ராசக்தி
எழுதரிய காயத்ரி உமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடல்எழுதி மோகித்து
இதணருகு சேவிக்கும் முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கும்
அதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே!

## 6

சரத்தே உதித்தாய் உரத்தே குதித்தே
சமர்த்தாய் எதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தாய் அடுத்தாய்
தகர்த்தாய் உடற்றான் இருகூறச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தான் எதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேயின்
கரித்தோல் உரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனாரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்க்கா மமுற்றூர் முருகோனே!

7

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்கும்நற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சக்தியிற் பரமான
துரியமேல் அற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியைஈ றற்றசொற்
சுகசொரூ பத்தைஉற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழைஓ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலும்ஈ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமானே!

8

திருமகள்உ லாவும் இருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவும்அடி யார்கள் மனதில்விளை யாடும்
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்

அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினைஇ லாத தருவினைவி டாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியின்அதி பார
இருதனவி நோதப் பெருமாளே!

9

பாரவித முத்தப்ப டாபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு நித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
கார்அணிகு ழற்கற்றை மேல்மகரம் ஒப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன்அ கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேர்இரவி உட்கிப்பு காமுதுபு றத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்னத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபிஎயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயில்அரு ணக்கற்றை
வேல்களில்அ கப்பட்ட பெருமாளே!

10

மருவுரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கும் மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கும் அதனாலும்

இருகணுல் மூத்தம் உதிரயா மத்தின்
இரவினுல் நித்தம் மெலியாதே
இடருரு மெத்த மயல்கொளா திற்கும்
இவனைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பில் அரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்தர் அருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமானே!

## 11

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமன ணுமற் றிரிவாரும்
நீதகல ஓதிப் பணியாரும்
நீநரக மீதிற் றிகழ்வாரே
நாதஒளி யேநற் குணசீலா
நாரிஇரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமானே!

## 12

முதிரும் ஆர வார நட்பொ
டிலகும் ஆர வாரம் எற்றி
முனியும் ஆர வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில்
எரியு மால மார்பி டத்து
முழுகி ஏறி மேல்எ றிக்கும் நிலவாலே

வெதிரில் ஆயர் வாயில் வைத்து
மதுர ராகம் நீடி சைக்கும்
விளைவி டாத தாய ருக்கும் அழியாதே
விளையு மோக போக முற்றி
அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீஅ ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்குள்
எதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சத்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி
களப மார்ப யோத ரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி ஆடும் வெற்றி
விடையில் ஏறும் ஈசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே
அகில லோக மீது சுற்றி
அசுரர் லோகம் நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே !

## 13

வருபவர்கள் ஓலைகொண்டு நமனுடைய தூதரென்று
மடிபிடிய தாகநின்று தொட்போது
மயலதுபொ லாதவம்பன் விரகுடையன் ஆகுமென்று
வசைகளுட னேதொடர்ந்து அடைவார்கள்
கருவியத னூடெறிந்து சதைகள்தனை யேஅரிந்து
கரியபுன லேசொரிந்து விடவேதான்
கழுமுனையி லேயிறென்று விடுமெனும வேளைகண்டு
கடுகிவர வேணுமென்றன் முனமேதான்

பரகிரிஉ லாவுசெந்தி மலையினுட னேஇடும்பன்
பழனிதனி லேஇருந்த குமரேசா
பதிகள்பல ஆயிரங்கள் மலைகள்வெகு கோடிநின்ற
பதமடியர் காணவந்த கதிர்காமா
அரவுபிறை பூவை தும்பை விலுவமொடு தூர்வைகொன்றை
அணிவர்சடை யாளர்தந்த முருகோனே
அரகரசி வாயசம்பு குருபரகு மாரநம்பும்
அடியர்தமை ஆளவந்த பெருமாளே!

---

[வேறு தலங்களுக்குரிய திருப்புகழ்ப் பாடல்களில் கதிர்காமத்தின் பெயர் வந்துள்ளது. அந்தப் பாடல்கள் வருமாறு.]

## 14

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகமாகி
அயனென ஆகி அரியென ஆகி
அரனென ஆகி அவர்மேலாய்
இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையும் ஆகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ
எனதுமுன் ஓடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூஜை
மகிழ்கதிர் காமம் உடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே!

## 15

கனிதருங் கொக்குக் கட்செவி வெற்பும்
பழனியுந் தெற்குச் சற்குரு வெற்பும்
கதிரையும் சொற்குப் பட்டதி ருச்செந்
திலும்வேலும்

கனவிலும் செப்பத் தப்புமெ னச்சங்
கடஉடம் புக்குத் தக்கவ னைத்தும்
களவுகொண் டிட்டுக் கற்பனை யிற்கண்
சுழல்வேனைப்

புனிதன்அும் பைக்குக் கைத்தல ரத்னம்
பழையகங் கைக்குற் றப்புது முத்தம்
புவியிலன் றைக்கற் றெய்ப்பவர் வைப்பென்
றுருகாளப்

பொழுதும்வந் திக்கைக் கற்ற எனைப்பின்
பிழையுடன் பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையையென் செப்பிச் செப்புவ தொப்பொன்
றுளதோதான்

அனனியம் பெற்றற் றற்றொரு பற்றும்
தெளிதரும் சித்தர்க் குத்தெளி சிற்கொந்
தமலைதென் கச்சிப் பிச்சிம லர்க்கொந்
தளபாரை

அறவிநுண் பச்சைப் பொற்கொடி கற்கண்
டமுதினுந் தித்திக் கப்படு சொற்கொம்
பகிலஅண் டத்துற் பத்திசெய் முத்தின்
பொலமேருத்

தனிவடம் பொற்புப் பெற்றமு லைக்குன்
றினைசுமந் தெய்க்கப் பட்டநு சுப்பின்
தருணிசங் குற்றுத் தத்துதி ரைக்கம்
பையிறாடே

தவமுயன் றப்பொற் றப்படி கைக்கொண்
டறமிரண் டெட்டெட் டெட்டும்வ ளர்க்கும்
தலைவிபங் கர்க்குச் சத்யமு ரைக்கும்
பெருமாளே!

## 16

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகஎ பிறைநச்சடையர்
குருவெனநல் உரையுதவு மயிலஎ எனத்தினமும்
உருகாதே

குயில்மொழிநன் மடவியர்கள் விழியால் உருக்குபவர்
தெருவில்அனை வரதம்அன மெனவே நடப்பர்நகை
கொளுமவர்கள் உடைமைமன முடனே பறிப்பவர்கள்
அனைவோரும்

தமதுவசம் உறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவி திதிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவஎ உழப்பியர்கண்
வலையாலே

சதிசெய்தவ ரவர்மகிழ அனைமீ துருக்கியர்கள்
வசமொழுகி அவரடிமை எனமா தர்இட்டதொழில்
தனில்உழலும் அசடனைஉன் அடியே வழுத்தஅருள்
தருவாயே

சமரமொடும் அசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியில் அவர்கள்படை கெடவேல் எடுத்தவனி
தனில்நிருதர் சிரம்உருள ரணதூள் படுத்திவிடு
செருமீதே

தவனமொடும் அலகைநடம் இடவீர பத்திரர்கள்
அதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனில்மகிழ விடுபேய் திரைத்திரள்கள்
பலகோடி

திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கரஅமரர் பதிவாழ் வுபெற்றுலவு
முருகோனே

திருமருவு புயன்அயனொ டயிரா வதக்குரிசில்
அடிபரவு பழனிமலை கதிர்காமம் உற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவே ரகத்திலுறை
பெருமானே.

# 17

கொந்துத் தருகுழல் இருளோ புயலோ
விந்தைத் திருநுதல் சிலையோ பிறையோ
கொஞ்சிப் பயில்மொழி அமுதோ கனியோ விழிவேலோ

கொங்கைக் குடம்இரு கரியோ கிரியோ
வஞ்சிக் கொடிஇடை துடியோ பிடியோ
கொங்குற் றுயரல்குல் அரவோ ரதமோ எனுமாதர்

திந்தித் திமிதிமி திமிதா திமிதோ
தந்தித் திரிகிட கிடதா எனவே
சிந்திப் படிபயில் நடமா டியபா விகள்பாலே

சித்தைத் தயவுகள் புரிவேன் உனையே
வந்தித் தருள்தரும் இருசே வடியே
சிந்தித் திடமிகு மறையா கியசீர் அருள்வாயே

வெந்திப் புடன்வரும் அவுணே சனையே
துண்டித் திடுமொரு கதிர்வேல் உடையாய்
வென்றிக் கொருமலை எனவாழ் மலையே தவவாழ்வே

விஞ்சைக் குடையவர் தொழவே வருவாய்
கஞ்சத் தயனுடன் அமரே சனுமே
விந்தைப் பணிவிடை புரியா தவர்மேல் அருள்கூர்வாய்

தெசத்திக் கணபதி மகிழ்சோ தரனே
செங்கட் கருமுகில் மருகா குகனே
சொத்தக் குறமகள் கணவா திறல்சேர் கதிர்காமா
சொம்பிற் பலவளம் முதிர்சோ லைகள்சூழ்
இஞ்சித் திருமதிள் புடைசூழ் அருள்சேர்
துங்கப் பழனியில் முருகா இமையோர் பெருமானே!

## 18

கோமள வெற்பினை ஒத்த தனத்தியர்
காமனை ஒப்பவர் சித்தம் உருக்கிகள்
கோவையி தழ்க்கனி நித்தமும் விற்பவர் மயில்காளை
கோகிலம் நற்புற வத்தொ டுருக்குட்
ஆரணி யப்புள்வ கைக்கு ரல்கற் றிகல்
கோலவி ழிக்கடை இட்டு மருட்டிகள் விரகாலே
தூமம லர்ப்பணி மெத்தை படுப்பவர்
யாரையும் எத்திம னைக்குள் அழைப்பவர்
சோலைவ னக்கிளி ஒத்த மொழிச்சியர் நெறிகூடா
தூசுநெ கிழ்த்தரை சுற்றி உடுப்பவர்
காசுப றிக்கம றித்து முயக்கிகள்
தோதக வித்தைப டித்து நடிப்பவர் உறவாமோ
மாமரம் ஒத்துவ ரிக்குள் நெருக்கிய
சூரனை வெட்டிதி ணைக்கு டலைக்கொடி
வாரணம் மெச்சஅ ளித்த அயிற்குக கதிர்காம
மாமலை யிற்பழ னிப்பதி யிற்றனி
மாகிரி யிற்றணி கைக்கிரி யிற்பர
மாகிரி யிற்றிரை சுற்றி வளைத்திடும் அலைவாயில்
ஏமள யிற்பல வெற்பினில் நற்பதி
ஞாலல கத்தினி லுற்றுறு பத்தர்கள்
ஏதுநி னைத்தது மெத்த அளித்தருள் இளையோனே

ஏரக வெற்பெனும் அற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
ராஜத லட்சண லட்சுமி பெற்றருள் பெருமாளே!

# 19

புரைபடுஞ் செற்றக் குற்ற மனத்தன்
தவமிலன் சுத்தச் சத்ய அசத்யன்
புகலிலன் சுற்றச் செத்தையுள் நிற்கும் அபிசாரன்

பொறையிலன் கொத்துத் தத்வ விகற்பம்
சகலமும் பற்றிப் பற்றற நிற்கும்
பொருளுடன் பற்றுச் சற்றுமில் வெற்றன் கொடியேனின்

கரையறுஞ் சித்ரச் சொற்புகழ் கற்குங்
கலையிலன் கட்டைப் புத்தியன் மட்டன்
கதியிலன் செச்சைப் பொற்புய வெற்புங் கதிர்வேலுங்

கதிரையுஞ் சக்ரப் பொற்றையும் மற்றும்
பதிகளும் பொற்புக் கச்சியும் முற்றுங்
கனவிலுஞ் சித்தத் திற்கரு திக்கொண் டடைவேனோ

குரைதரும் சுற்றுச் சத்த சமுத்ரம்
கதறிவெந் துட்கக் கட்புர துட்டன்
குலமடங் கக்கெட் டொட்டொழி யச்சென் றொருநேமிக்

குவடொதுங் கச்சொர்க் கத்த ரிடுக்கண்
கெடநடுங் கத்திக் கிற்கிரி வர்க்கங்
குலிசதுங் கக்கைக் கொற்றவ னத்தங் குடியேறத்

தரைவிசும் பைச்சிட் டித்த இருக்கன்
சதுர்முகன் சிட்சைப் பட்டொழி யச்சந்
ததமும்வந் திக்கப் பெற்றவர் தத்தம் பகையோடத்

நகையதண் டைப்பொற் சித்ர விசித்ரம்
தருசதங் கைக்கொத் தொத்து முழக்கும்
சரணகஞ் சத்திற் பொற்கழல் கட்டும் பெருமானே!

## 20

பொங்கும் கொடிய கூற்றனும்
நஞ்சும் பொதுவில் நோக்கிய
பொங்கும் புதிய நேத்திர வலைவீசிப்

பொன்கண் டினகு கூத்திகள்
புன்கண் கலவி வேட்டுயிர்
புண்கொண் டுருகி ஆட்படும் மயல்தீரக்

கொங்கின் புசக கோத்திரி
பங்கன் களையும் ஆய்க்குடி
கொங்கின் குவளை பூக்கிற கிரிசோணா

குன்றும் கதிரை பூப்பர
முன்துன் றமரர் போற்றிய
குன்றம் பிறவும் வாழ்த்துவ தொருநானே

வெங்கும் பகர மாய்க்கெடி
விஞ்சும் பகழி வீக்கிய
வெஞ்சண் டதனு வேட்டுவர் சரணா

வித்தும் பணிய வாய்த்தருள்
அந்தண் புவன நோற்பவை
யென்குங் குமகு யாத்திரி பிரியாதே

எங்கும் கலுழி ஆர்த்தெழ
எங்கும் சுருதி கூப்பிட
எங்கும் குருவி ஓச்சிய திருமானை

என்றென் றவச மாய்த்தொழு
தென்றும் புதிய கூட்டமொ
டென்றும் பொழுது போக்கிய பெருமானே.

# கதிர்காம இளமுருகன்

பாவைக் காத்த தமிழ்ப்புலவர்
பண்ணார் பனுவல் பலபாட
நாவைக் காத்த முனிவரர்கள்
நாடி விரதத் தவம்புரியத்
தேவைக் காத்துப் புருகூதன்
சிறப்பைக் காத்து மற்றவன்றன்
காவைக் காத்த இளமுருகன்
கதிர்கா மத்தில் இருந்தானே. 1

பண்ணைக் கொடுத்துப் பாடவைத்துப்
பத்தி கொடுத்துப் பணியவைத்து
மண்ணைக் கொடுத்து வாழவைத்து
மதியைக் கொடுத்து நாடவைத்து
விண்ணைக் கொடுத்து வானவர்கள்
விளங்கி நிலவி ஒளிரவைத்துக்
கண்ணைக் கொடுக்கும் இளமுருகன்
கதிர்கா மத்தில் இருந்தானே. 2

பொருப்பூ ரனைத்தும் எழுந்தருளும்
புனிதன் குறிஞ்சித் தனிநாதன்
விருப்பூ ரத்தன் அடிபேணும்
விமலர்க் கருளை வழங்குபிரான்
திருப்பூ ணாகல மால்மருகன்
செவ்வேற் கரத்தான் இலங்கையினிற்
கருப்பூ ரத்தின் ஒளிமிகுத்த
கதிர்கா மத்தில் இருந்தானே. 3

அங்கைத் தலத்தில் வேலெடுத்த
ஐயன் குமரன் ஆறுமுகன்
பங்கை யுமையாட் கீந்தபரன்
பரவுங் குரவன் மயிலூர்வோன்

கொங்கை விரிக்கும் கடம்பமலர்க்
குளிர்தார் மார்பன் மாணிக்க
கங்கைக் கரையில் திகழ்கின்ற
கதிர்கா மத்தில் இருந்தானே. 4

வண்டுங் காணு மலையுச்சி
மலருங் காந்தட் கண்ணிபுனைந்
தண்டு மடியார் கழலடியில்
அருச்சித் தேத்தும் மலர்புனைந்தான்
மீண்டும் கரவும் அறியாத
விமலர் வந்து தரிசித்துக்
கண்டும் கண்டி லோமென்னும்
கதிர்கா மத்தில் இருந்தானே. 5

சாதல் பிறத்தல் எனும்விலங்கு
தறித்துச் சடலச் சிறைமாற்றி
நோதல் உவத்தல் இல்லாத
நுண்மா னுலகந் தனிலேற்றி
ஆதல் அடியார் பாலுறவே
அருளைச் செய்யும் முருகபிரான்
காதல் வள்ளி தனைமணந்து
கதிர்கா மத்தில் இருந்தானே. 6

கூட்டுக் கிளிபோற் சிறைப்பட்டுக்
கும்பிக் குணவு தேடி அழும்
பாட்டுக் கெவரும் மனமிரங்காப்
பாரில் வாழ வேண்டாமல்
வீட்டுக் குரிமை விழைபவரை
விரும்பி யாளும் திருமுருகன்
காட்டுக் கிடையே விளங்குதிருக்
கதிர்கா மத்தில் இருந்தானே. 7

வேலால் அன்றிற் பெயர்மலையை
விரித்த பெருமான் மாமறைகள்
நாலால் உயர்தன் புகழ்வகையை
நாட்டும் முருகன் தேனாலே
பாலால் அடியார் ஆட்டஅருள்
பாலித் துவக்கும் எம்பெருமான்
காலால் நடந்து வந்துபணி
கதிர்கா மத்தில் இருந்தானே. 8

அளவி லடங்காப் பெரும்புகழான்
அகிலாண் டங்கள் படைத்தளிப்பான்
களவில் வள்ளி தனைக்கண்டு
காதல் கொண்ட பேராளன்
துளவ மார்பன் திருமருகன்
தொல்சீர் இலங்கை யதனிற்சிங்
களவர் பூசை செயஉவந்து
கதிர்கா மத்தில் இருந்தானே. 9

தீப்புக் கரிய தவம்புரியும்
திறலோர் காணாப் பரமேசன்
யாப்புற் றுருகு மனமுடைய
இயல்பார் அன்பர்க் கெளியகுகன்
பாப்புற் றணியா இலகுமரன்
பயந்த குமரன் யாவர்க்கும்
காப்புத் தெய்வ மெனப்பரவக்
கதிர்கா மத்தில் இருந்தானே. 10

—கி. வா. ஜ.

# மணிச்செஞ் சோதி

வேதமுடி மீதிருந்த தானாய் நீயே
விளங்குமணி மந்திரமா விளைந்தோய் நீயே
சூதனமா முடியனருள் பாலன் நீயே
குமரகுரு பரனெனும்பேர் கொண்டோன் நீயே
வாதமிலா மோனமுனி வோர்தம் நெஞ்ச
மாக்கோயில் நடஞ்செய்யும் குமரன் நீயே
காதலுறு வள்ளியணை நாதன் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 1

மட்டரிய புகழ்உடைய மைந்தன் நீயே
மாதேவற் கரியதிருக் குமரன் நீயே
எட்டரிய பரவெளியி லிருந்தோய் நீயே
எந்நாளும் தொடர்ந்துவரும் அன்னை நீயே
தட்டரிய மறையாகி மறைவோய் நீயே
தாரகமந் திரப்பொருளாய் நின்றோய் நீயே
கட்டழகுத் திருவுருவக் கந்தன் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 2

செண்டாகிச் செண்டுக்குள் மலரு மாகித்
திகழ்மலரில் இதழாகி இதழில் மென்மைத்
தண்டாது மணமாகித் தண்மை யாகித்
தயாபரனாய்த் தாங்குகின்ற தெய்வம் நீயே
கொண்டாடு மடியார்கள் உள்ளத் துள்ளே
கோதகன்ற தேனாகி அமுத மாகிக்
கண்டாகிக் கரும்பாகி இனிப்பாய் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 3

வானகத்தார்க் கரியபெரு மருந்து நீயே
மண்ணகத்தார் முடிவிளங்குந் தாளோன் நீயே
உள்ளகத்தே உயிர்போல உயிரை ஆட்டும்
உயிராகி உணர்வாகி உறைவோய் நீயே

தேனகத்தே வைத்ததுபோல் அன்ப ருள்ளம்
 தித்திக்க விளையாடல் புரிவோய் நீயே
காணகத்தே மாணிக்க கங்கை யின்பாற்
 கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதீ. 4

விரியுமிடர்க் கடல்மூழ்கி வழிகா ணாமல்
 வேலவனே கதியென்று தெளிந்து நின்பால்
பரியுமனத் துடன்வந்து பாடி யாடிப்
 பணிந்துருகிக் கண்ணீரைப் பெருக்கு மன்பர்க்
குரிமையுட னருள்வழங்கும் வள்ளல் நீயே
 ஓங்காரந் தனைமயிலாக் கொண்டோன் நீயே
கரிபிடியோ டணுகிவலஞ் செய்து போற்றும்
 கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதீ. 5

ஆசினியும் நறுங்கதலித் தருவும் மாவும்
 அடர்கின்ற சோலையென மிளிர்வாய் நீயே
பேசினிய மலையாகி ஆறாய்க் காடாய்ப்
 பெருவயலாய் மேகமாய் ஒளிர்வாய் நீயே
தூசினிய உணவிருக்கை அணிகள் இன்பச்
 சூழலெல்லாம் தன்உருவா நிற்பாய் நீயே
காசினியிற் பலசமயத் தினரும் போற்றும்
 கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதீ. 6

சொல்லினையே செந்தேனிற் குழைத்துப் பேசும்
 சுந்தரியவ் வள்ளியினை அணைந்தோன் நீயே
மல்லலுறு கரிமகளை மணந்தோன் நீயே
 மலைமகளை மனமுருக்கும் குழந்தை நீயே
வெல்லரிய வடிவேற்கை வீரன் நீயே
 மேலவர்க்கும் மேலவர்க்கும் மேலோன் நீயே
கல்லனைய நெஞ்சினரும் உருகிப் போற்றும்
 கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி 7

பண்கண்ட மொழிவள்ளிப் பாவை தன்னைப்
பரிந்தோடித் தினைப்புனத்திற் கும்பிட் டேத்தி
விண்கண்ட நிலைமறந்து கெஞ்சி நின்ற
விமலமய லெனுங்கருணை விளைத்தோன் நீயே
மண்கண்ட மலைகளெலாம் கோயில் கொண்டு
வளர்குறிஞ்சித் தலைவனா யவிர்ந்தோன் நீயே
கண்கண்ட தெய்வமென அடியர் பேணக்
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 8

விதைவிதையா வயலினிலே விளைவு நீயே
விரகுணரா மோனநிலை இன்பம் நீயே
பதைபதையா நெஞ்சினுள்ளே படர்ந்தாய் நீயே
பலமறையும் காணரிய மறையும் நீயே
எதைஎதையோ நினையாமல் எளியேன் றன்னை
இருசரண பங்கயத்திற் றடுத்தோய் நீயே
கதைகதையா அடியார்கள் பரவிப் பேசும்
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 9

ஞாலமெலாம் ஆக்கியளித் தழிப்போன் நீயே
நாடுதிரோ பவஞ்செய்தே அருள்வோன் நீயே
நிலமெலாம் ஒருங்கமைந்த மயிலின் மீதே
நினைக்குமடி யார்க்கருள வருவோன் நீயே
ஏலமெலாம் மணந்தகுழல் வள்ளி தெய்வ
யானையெனும் கொடிபடரும் தரு நீயே
காலமெலாம் கடந்துநின்ற கந்தன் நீயே
கதிர்காமத் தெழுந்தருளும் மணிச்செஞ் சோதி. 10

—கி. வா. ஜ.

# கதிர்காம வேலவன்

சாமியென்றும் பூதமென்றும் சாற்றித் தடுமாறிப்
பூமியெங்கும் சுற்றிப் புழுங்கிமனம் வாடாமல்
நாமகற்றி ஆட்கொண்டு நாடும் அடியார்க்குக்
காமியங்கள் ஈயும் கதிர்காம வேலவனே. 1

கூட்டின் நடுவே குமையுங் கிளிபோல்உளர்
வீட்டின் நடுவேயார் வேதனையை நீக்குபிரான்
பாட்டின் நடுவே பரவும்பண் போன்றினிப்பான்
காட்டினடு வோங்கும் கதிர்காம வேலவனே. 2

தஞ்சம் புகுமடியார் தாரகமா எஞ்ஞான்றும்
அஞ்சல் எனவருளும் ஐயன் முருகேசன்
கொஞ்சும் குரல்வள்ளி கோமான் மறைபோதும்
கஞ்சன் பணியும் கதிர்காம வேலவனே. 3

பால்காட்டிச் சேயின் பசிபோக்கும் தாய்போல
நூல்காட்டி ஞானம் நுவலும் குருபோல
வேல்காட்டி மஞ்ஞை வியனூர்தி யுங்காட்டிக்
கால்காட்டி யாள்வான் கதிர்காம வேலவனே. 4

நீலமயில் மேலிவரும் நித்தன் இருள்போக
ஓலமிடுங் கோழி உயர்த்த கொடிக்குமரன்
சேலனைய கண்வள்ளி தேனளிக்க உண்டபிரான்
காலபயம் போக்கும் கதிர்காம வேலவனே. 5

ஓமெழுத்தே மஞ்ஞையென ஊர்ந்தருளும் செஞ்சோதி
சாமவத்தை இல்லாமற் றாளடைந்தா ரைக்காப்பான்
நேமநிட்டை யின்றேனும் நித்தம் துதித்துருகின்
காமமுற்றப் போக்கும் கதிர்காம வேலவனே. 9

எட்டிப் பிடிக்கரியான் ஏணிவைத்தும் எட்டரியான்
தெட்டி மயக்கும் திறம்வல்லான் வேதமின்னும்
கொட்டி முழக்கிடினும் கூறரிதென் றோங்குகுகன்
கட்டிப்பொன் னன்னான் கதிர்காம வேலவனே. 7

பள்ளம்வரு பூம்புனல்போற் பாத மலர்அணைந்தே
உள்ளம்வரு வெள்ளமென ஓங்குமன்பு பூண்டவரை
எள்ளளவும் பாணியா தேற்றுத் திருவருள்செய்
கள்ளமிலான் எங்கள் கதிர்காம வேலவனே. 8

புலமெனுமக் குஞ்சரத்தின் போக்கினிலே போகாமல்
நலமுடைய ஞானத்தால் நாட்டமொன் றும் பேரன்பர்
உலகமிசை யேவந் துழல்பிறவி மாக்கடற்குக்
கலமனைய தாளான் கதிர்காம வேலவனே. 9

விண்ணாகி யனைத்தையுந்தன் வீறுமரு ளிற்றாங்கி
மண்ணாகி எவ்வுயிர்க்கும் வாழ்வருளி அன்பர்களுக்
கெண்ணாகி எண்ணத் தெழுஞ்சோதி யாகியவர்
கண்ணாகி நிற்பான் கதிர்காம வேலவனே. 10

—கி. வா. ஜ.

# தமிழ்க் காப்பியங்கள்

ஒரு சிறந்த ஆராய்ச்சி நூல்

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

★

சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்த முதற் பதிப்பில் இன்னும் பல ஆராய்ச்சி முடிவுகளைச் சேர்த்துப் பல்கலைக் கழகத்தின் அநுமதியுடன் வெளியிடுகிறோம்.

★

"இவ்வகையான நூல் இதுவரை தமிழில் ஒருவராலும் எழுதப்படாததால் தமிழ் நூல் பயில்வோருக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் இது பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை." இப்படி இப்புத்தகத்தின் முன்னுரையில் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. **சாமிநாதையரவர்கள்** அருளியிருக்கிறார்கள்.

**விரைவில் வெளியாகும்!**

உங்கள் பிரதிக்கு இப்போதே எழுதிவிடுங்கள்.

**அமுத நிலையம் லிமிடெட்**

தேனாம்பேட்டை :: சென்னை - 18